For private circulation only

Book Post

https://christianhistoricalsociety.in/

# கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்

• மே 2025

திசை தெரியாமல் திகைக்காதிருக்க திருச்சபை வரலாறு தெரியவேண்டும்

• விலை : ரூ 60 • இதழ் 60



# பதிப்பாசிரியரின் உரை

**கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள் – மாத இதழ்** (ஐந்தாம் ஆண்டு வெளியீடு)



கிறிஸ்துவுக்குள் அன்பான கிறிஸ்தவ வரலாற்றுச் சங்க உறுப்பினர்களுக்கும், வாசகர்களுக்கும், ஆண்டவரும் மீட்பருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வணக்கம்!

> 'பூர்வ நாட்களில் நீர் நடத்தி வந்த கிரியைகளை எங்கள் பிதாக்கள் சொல்லக் கேட்டோம்.'
> (சங்கீதம் 44:1)
> 'ஒருவன் எனக்குத் தெரிவிக்காவிடில் அது எனக்கு எப்படித் தெரியும்?'
> (அப்போ.8:31)

இந்நிகழ்வுகளும் இவ்வார்த்தைகளும் நமது 'கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்' இதழின் பயணத்திற்கும், நோக்கத்திற்கும் வலிமையான அடித்தளமாய் அமைந்துள்ளன.

அனைத்தாச்சாரியனாகிய ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் கிருபையினாலும், உங்கள் அனைவரது பங்களிப்பினாலும், இம்மாத இதழ் இப்போது தனது ஐந்தாவது ஆண்டு நிறைவைக் காண்கிறது. கடந்த ஐந்து ஆண்டுகளாக, ஒவ்வொரு மாதத்திலும் வெளிவந்த இந்த ஆய்விதழ், கிறிஸ்தவ வரலாற்றின் மறைந்த பக்கங்களை வெளிச்சமிட்டு, புதிய தலைமுறையினருக்கான ஒரு மரபுப் பாலமாய் விளங்கியுள்ளது.

இந்தக் காலப்பகுதியில், கட்டுரை ஆசிரியர்களின் பங்களிப்பு, வடிவமைப்பாளர்களின் சிரத்தை, வாசகர்களின் ஊக்கங்கள், மற்றும் குறிப்பாக பொருளாதார ஆதரவாளர்களின் தாராளம் ஆகியவை இந்நிறைவிற்கு வழிவகுத்துள்ளன. இந்த ஊழியம், ஒரு தனி முயற்சி அல்ல, இறையச்சியும், மக்களாசியும் சேர்ந்த பயணமே என்பது தெளிவாகத் தெரிகிறது.

கடந்த ஆண்டு, நூலகம் மற்றும் அருங்காட்சியக கட்டடப் பணிகள் நடைபெறுவதால், இதழை நேரத்துக்கு வெளியிடும் பணியில் சில சிரமங்களை எதிர்கொண்டோம். ஆனாலும், ஆண்டவரின் திட்டமாய் அந்தச் சிரமங்களும் ஒரு பயனுள்ள வளர்ச்சிக்கு வழிவகுத்தன. புதிய ஆண்டு, புதிய நம்பிக்கைகள், ஆசீர்வாதங்கள், ஒளி ஆகியவற்றுடன் நம்மை அணுகட்டும்.

இம்மாத இதழ், தங்களின் மனங்களைத் தொட்டுப் பேசும் கட்டுரைகளுடன் வந்துள்ளது:

- வரலாற்று சுற்றுப்பயணங்களின் முக்கிய நிகழ்வுகள்
- கள ஆய்வுகள் மற்றும் தொன்ம நுணுக்கங்கள்

இவை அனைத்தும் நம் தமிழ் மண்ணின் மறைந்துபோன கிறிஸ்தவ சுவடுகளை மீட்டெடுக்கும் ஆவணங்கள்.

'கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்' என்பது வெறும் மாத இதழ் அல்ல, இது நம் சமூகத்தின் மறைக்கப்பட்ட, மறக்கப்பட்ட, மறந்துபோன வரலாற்றை மீள அறிமுகப்படுத்தும் அரிய செயலாகும். இது, நம் முன்னோர்களின் விஸ்வாசப் பயணங்களை அறிந்து கொள்ளும் கண்ணாடி; நம் எதிர்காலத்திற்கான வழிகாட்டியும் ஆகும்.

எனவே, கிறிஸ்தவ வரலாற்றை நேசிக்கும் ஒவ்வொருவரும் இந்த இதழை வாசிக்கவும், பரிந்துரைக்கவும் கேட்டுக்கொள்கிறேன். உங்கள் நண்பர்கள், உறவினர்கள், மாணவர்கள், தேவக்கூட்டங்கள் ஆகிய இடங்களில் இதை அறிமுகப்படுத்துங்கள்.

இதழின் தொடர்ச்சியான வெளிவருவதை உறுதிப்படுத்த, உங்கள் சந்தாவை புதுப்பிக்கவும், நன்கொடை வழங்கவும் தயங்க வேண்டாம். உங்கள் ஒவ்வொரு பங்களிப்பும், நம் வரலாற்றைப் பாதுகாக்கும் திருப்பமாகும்.

இறைவனுடைய ஆசீர்வாதமும், சத்தியத்துக்கான பசியும் உங்கள் மனங்களில் எப்போதும் நிலவட்டும்!

கிறிஸ்துவுக்குள்,
மன்னா செல்வகுமார்

Manna Selvakkumar


UPI ID: mannaselvakumar@okicici

**மன்னா செல்வகுமார்**
ஆசிரியர்

**சுஜித் ரெக்ஸ்**
வடிவமைப்பு

G Pay +91 9176780001 www.christianhistoricalsociety.in


இது ஒரு வரலாற்றுச் சங்க உறுப்பினர்களுக்கான பதிப்பு. சந்தா விபரங்கள் இதழின் உள்ளே,



## நாசரேத்தில் வெகு விமர்சையாக நடைபெற்ற மகோன்னத

# மிஷனரி மார்காஷிஸ் நூல் வெளியீட்டு விழா

**திருமறையூர், 27 ஏப்ரல் 2025:**

மன்னா செல்வகுமார்

நாசரேத்தின் தந்தை என்று போற்றப்படும் கனம் ஆர்தர் மார்காஷிஸ் அவர்களின் 117-ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு, முனைவர் டி. ஏ. கிறிஸ்துதாஸ் அவர்கள் எழுதிய மற்றும் மறுபதிப்பு செய்யப்பட்ட 'மகோன்னத மிஷனரி மார்காஷிஸ்' நூல் வெளியீட்டு விழா மற்றும் நாசரேத் வரலாற்று கருத்தரங்கு திருமறையூர் மறுரூப சிற்றாலயத்தில் 27 ஏப்ரல் 2025 அன்று மாலை சிறப்பாக நடைபெற்றது.

விழா அருள்திரு H. ஜான் சாமுவேல் அவர்களின் ஜெபம் மற்றும் பன்முக அறிமுக உரையுடன் துவங்கியது. கிறிஸ்தவ வரலாற்றுச் சங்க செயலாளர் மன்னா செல்வகுமார் வாழ்த்துரை வழங்கி வரலாற்று சங்க சிறப்புகளை எடுத்துரைத்தார்.

திருச்செந்தூர் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஏடிகே. ஜெயசீலன் அவர்கள் முதல் பிரதியை வெளியிட சபை மூப்பர் திரு. ஜெயபால் அவர்கள் பெற்றுக் கொண்டார். இரண்டாம் பிரதியை வெளியிட திரு. ரஞ்சன் வேதராஜ் அவர்கள் பெற்றுக் கொண்டார். மூன்றாம் பிரதியை சபை மூப்பரும், பணி நிறைவு குருவுமான அருள்திரு. பொன்னுசாமி அவர்கள் பெற்றுக் கொண்டார். இரஞ்சன் வேதராஜ் அவர்கள் வரலாற்று உரை வழங்கினார்.

ஏடிகே ஜெயசீலன் மற்றும் லேவி அசோக் சுந்தர்ராஜ் வாழ்த்துரை வழங்கினார். பின்னர் திரு ரஞ்சன் வேதராஜ் அவர்கள் நிகழ்த்திய வரலாற்றுப் பேச்சு, ஆர்தர் மார்காஷிஸ் அவர்களின் வாழ்க்கை, சேவை, தமிழ் சமூகத்தின் மேம்பாட்டில் அவர் ஆற்றிய பங்குகளை விரிவாக எடுத்துரைத்தது. முனைவர் அருள்திரு. டி. ஏ. கிறிஸ்துதாஸ் அவர்கள் எழுதிய 'மகோன்னத மிஷனரி மார்காஷிஸ்' நூலை சிறப்பு விருந்தினர்களால் வெளியிட்டு, நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் பரிசாக வழங்கப்பட்டது.

நூல் வெளியீட்டு விழாவில் திருச்சபை மூப்பர்கள் பெரியவர்கள், மக்கள், சிறப்புரையாளர், ஊடகவியலாளர்கள், கல்வியாளர்கள் மற்றும் இளைஞர்கள் ஆர்வமுடன் கலந்துகொண்டனர். இந்நிகழ்வின் இறுதியில், கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம் சார்பாக, வந்துள்ள அனைவருக்கும், தங்கள் நேரத்தையும் நேசத்தையும் செலுத்தி நிகழ்ச்சியை சிறப்பித்ததற்காக, உண்மையான நன்றியும், ஆழ்ந்த பாராட்டும் தெரிவிக்கப்பட்டது.

கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கத்தின் பேரில் சிறப்பாக ஒருங்கிணைக்கப்பட்ட இவ்விழா, 'நம் வரலாறு நம் பெருமை' என்ற வாக்கியத்தின்கீழ், நமது பண்டைய திருச்சபை வரலாற்றை மீண்டும் நினைவுகூரச் செய்தது.

விழா இறுதியில் திருமறையூர் சேகர தலைவர் அருள்திரு H. ஜாண் சாமுவேல் அவர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துவிட்டு ஆசீர்வாதத்துடன் நிகழ்ச்சி நிறைவுற்றது.



# அமுதுண்ணாக்குடிச் சபையின் ஒளி ஒளிக்கும் வரலாறு

மன்னா செல்வகுமார்

### துவக்க நாள் - ஆவிக்குரிய திருவிழா

1825 நவம்பர் 29-இந்த நாளை தமிழ்நாட்டு கிறிஸ்தவ வரலாற்றில் பொற்காலமாகக் குறிப்பிடலாம். அதே நாளில் வடக்கு அமுதுண்ணாக்குடியில் பத்து பேர் ஞானஸ்நானம் பெற்றனர். அவர்கள் தான் அந்தத் திருச்சபையின் முதல் ஆயத்தக்காரர்கள். இந்தச் சபை துவக்கத்திலிருந்தே ஆவியின் அருளால் நிரம்பியவையாகவும், கிறிஸ்துவுக்காய் வைராக்கியமுள்ளவையாகவும் விளங்கியது.

### முதல் ஆயத்தக்காரர்கள்:

எண்/ புதிய பெயர்/ வயது/ பழைய பெயர்/ உறவு

1. சுவாமிதாசன் 55 நாயனடிமை
2. பெரியமரியான் 45 இசக்கி
3. வேதமுத்து 30 தெரியவில்லை மகன்
4. நல்லதம்பி 40 நல்ல பெருமாள்
5. மார்த்தான் 30 வீர மாயக்காளி மனைவி
6. இஸ்ரவேல் 15 ராமன்
7. சாந்தப்பன் 25 பண்டாரம்
8. பேதுரு 25 ஈனமுத்து
9. சின்னமரியாள் 35 உமையமை விதவை
10. அன்னம்மை 50 காலமை விதவை

### சமத்துவக் கொள்கையால் அடித்தளம் போட்ட ரேனியஸ் ஐயர்

இவர்களுக்குப் போதனை அளித்து சபையை உருவாக்கியவர் சார்லஸ் தியாப்பிலஸ் ஈவால்ட் ரேனியஸ் (1790-1838) ஐயர். சாதிய வித்தியாசங்களை ஒழித்து சமத்துவக் குடியிருப்புகளை நிறுவினார். பெண்கள் கல்விக்காக பள்ளிகள் தொடங்கினார். சமூக சீர்திருத்தங்களில் ஆர்வமுடன் செயல்பட்டு, பல நலச்சங்கங்களைத் தோற்றுவித்தார். 7.7.1820 அன்று பாளையங்கோட்டையை அடைந்த அவர், அங்கிருந்து முழு திருநெல்வேலி மாவட்டத்திற்கும் பயனுடையதாக 18 ஆண்டுகள் பணியாற்றினார். இதன் விளைவாக 371 சபைகள் உருவானது.

பின்னர், ஷ்மிட் (1788-1857) என்ற ஜெர்மன் ஊழியரும் அவருடன் இணைந்து பணியாற்றினார். ஆரம்பத்தில் ஒருவரும் கிறிஸ்துவில் திரும்பவில்லை என்றாலும், 1822 மார்ச் 10ஆம் தேதியிலிருந்து, பாளையங்கோட்டை, திருப்புளியங்குடி, அருளூர், அமுதுண்ணாக்குடி, சாத்தான்குளம், ஸ்ரீவைகுண்டம், கான்ஸாபுரம், கீழப்பாட்டம் என பல இடங்களில் சபைகள் தோன்றின.

### இன்றைய நிலை ? ஒரு குரல் எழவேண்டிய தருணம்

அமுதுண்ணாக்குடிச் சபை இன்று தனது 200வது ஆண்டு விழாவைக் கொண்டாடவிருக்கிறது. ஆனால் வருத்தம்தரும் உண்மை ஒன்று-பல ஆண்டுகளாக மக்கள் வழிபட்ட பழைய ஆலயம் இடிக்கப்பட்டுவிட்டது. புதிய ஆலயம் கட்ட திட்டமிட்டாலும், அஸ்திபாரம் மட்டுமே அமைக்கப்பட்டு அது பல ஆண்டுகளாக அப்படியே நிற்கிறது.

இது, முன்னாள் நிர்வாகத்தினர் திட்டமிடாமல் செயல்பட்டதாலேயே நிகழ்ந்தது. இன்று ரேனியஸ் ஐயரின் புகழை எடுத்துரைக்கும் திருச்சபைகள், அவரது பணியால் பிறந்த இச்சபைகளின் நிலையை நோக்கி, தேவையான ஊக்கமும், ஆதரவும் அளிக்க வேண்டிய கடமையில் உள்ளன.

### புதிய ஒளிக்கான விழிப்புணர்வு

அமுதுண்ணாக்குடி போன்ற சபைகள் மீண்டும் உயிர் பெற, அதன் வரலாறு அறியப்பட வேண்டும். இங்கு ஒரு மிசனரி வந்ததுமட்டுமல்ல; ஒரு புதிய வாழ்க்கை, ஒரு புதிய சமூக நியாயம், ஒரு புதிய ஆன்மீக ஒளி பிறந்தது. அதன் 200 ஆண்டு சாதனை, ஒரு வெறும் விழா அல்ல-நாம் பாரம்பரியத்தை மீட்டெடுக்கும் பரிசுத்தமான அனுபவமாக இருக்க வேண்டும்.

### முடிவுரை

அமுதுண்ணாக்குடியின் வரலாறு, ஒரு சிறிய கிராமத்தின் அல்ல; அது தமிழக கிறிஸ்தவ சமூகத்தின் ஆன்மீக வீரம் பேசும் வரலாறு. அந்த ஒளியை மீண்டும் ஒளிரச் செய்ய, நமக்குள்ள ஆவியின் ஊக்கம் வேண்டும்.

### திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி பகுதிகளில் உள்ள சபைகளிடம் ஒரு பணிவான வேண்டுகோள்:

அமுதுண்ணாக்குடி சபை, உங்கள் அனைத்து சபைகளுக்கும் ஒரு மூதாதைச் சகோதரி சபை. இந்த சபையில், உங்கள் முன்னோர்களுக்குப் போதனை செய்தது, உங்கள் சபைகளுக்கும் அடித்தளமிட உதவியதே. ரேனியஸ் ஐயர், ஷ்மிட் ஐயர் ஆகியோர் இங்கே விழுந்த விதைபோல தூவிய செய்தியால் தான் இன்று நம்முடைய கிறிஸ்தவ வாழ்வு இவ்வளவு விரிந்திருக்கிறது. இன்றையதினம், அந்த பழைய விதையை மீண்டும் செழிக்கச் செய்வதற்கான தருணம்.

# லெந்துகாலமும் தொடர் வளர்ச்சியும்

V. Samuel Abraham
Regional Coordinator, South Asia
The Shepherd's Academy,

## ஒரு சமகால வரலாற்றுப் பார்வை

லெந்து காலம் நம் தொடர் வளர்ச்சிக்கான ஆயத்தக் காலம். வாரந்தோறும், சபைதோறும் ஆவிக்குரிய கூட்டங்கள், விதவிதமான செய்தியாளர்கள். அர்த்தமுள்ள சிலுவைத் தியானத்திற்கான பெரும் முயற்சிகள்! தென்னிந்தியத் திருச்சபைப் போதகரின் மகனாக வளர்ந்து, ஒரு வட இந்திய அருட்பணியாளனாகக் கடந்து சென்று, ஒரு ஊழியனாகத் தொடரும் எனது வாழ்வின் மூன்று தவக்கால நினைவுகளை ஒரு சமகால வரலாற்றுச் செய்தியாகப் பதிவுசெய்ய விழையும் ஒரு தாழ்மையான முயற்சி தான் இந்தக் கட்டுரை.

### 1.தெய்வீக அன்பின் திருக்காட்சி

ஒருங்கிணைந்த நெல்லைப் பேராயத்தின் வாகைக்குளத்தில் என் பெற்றோர் பணிசெய்தபோது, வருடந்தோறும் சேகர சபையோரை ஒருங்கிணைத்து, பேருந்து ஒழுங்குசெய்து, மதுரைப் பசுமலையில் லெந்துகாலத்தில் நடைபெற்ற தெய்வீக அன்பின் திருக்காட்சிக்குச் சென்று வந்த நிகழ்வுகள், அதிலும் குறிப்பாக அந்த தத்ரூபமான சிலுவைக்காட்சிகள், என் வாழ்வில் ஏற்படுத்திய இளமைப் பருவத் தாக்கம் மறுக்கமுடியாதது.

பிற்காலங்களில், சமுதாய பொழுதுபோக்கு நாடகங்கள் வருடாவருடம் அரங்கேற்றப்படும் ஒரிசாவின் கிராமிய பணித்தளங்களில் எப்படியாவது ஆண்டவர் இயேசுவின் வாழ்க்கை வரலாற்றை இத்தகைய பிரமாண்ட நிகழ்வாக நடத்திட வேண்டும்என்றஎனதுபாரமுள்ளகனவுஏனோநனவாகவில்லை. ஆனால், திடீரென்று ஒருநாள் புவனேஷ்வரிலிருந்து வந்த ஒரு கிறிஸ்தவ சீடத்துவக் கலைக்குழுவினர் கிறிஸ்துவின் உலக வாழ்வின் இறுதிவார நிகழ்வுகளை மல்க்கன்கிரி ஜஎம்எஸ் பள்ளி வளாகத்தில் நடத்தும்படி மாவட்டக் கிறிஸ்தவ அமைப்பினருடன் கைகோர்த்தபோது, மலையின் மத்தியிலும் திரளாய் வந்து கூடிய விசுவாசிகளின் ஆர்வமும் பக்தியும் என்னை மெய்சிலிர்க்க வைத்தன.

வளரும் புதிய சபை வட்டாரங்களில்
இத்தகைய முயற்சிகள் மற்றும் ஊழிய
மாதிரிகளின் தேவை இன்றும் உண்டு!
வசதிகளும் அனுபவமும் உள்ள சபைகள்
கரம் கொடுத்தால் மட்டுமே இது சாத்தியம்.

### 2.ஆத்தும நேசரின் அங்க மகத்துவம்



வருடத்தின் ஒவ்வொரு விசேஷ காலத்திற்கும் தேவையான புத்தகங்கள் ஒரு கருப்புக் கூடையிலிருந்து என் தந்தையின் மேசைக்கு வருவதை நான் பார்த்து வளர்ந்துள்ளேன். ஊழிய காலத்தில் சபைகளின் அதிகாலை ஆராதனையாகட்டும், இன்றும் மதிய வேளையின் தனி தியான நேரமாகட்டும், என் தந்தை வருடாவருடம் தவக்காலங்களில் பயன்படுத்தும் தியான நூல்களில் முக்கியமானது 'ஆத்தும நேசரின் அங்க மகத்துவம்' (சாமுவேல் பவுல் ஐயர், 1882). நானும் விசுவாசியானபோது, ஆர்வமாய் அப்புத்தகத்தை வாசிக்க முயன்றேன். ஆனால் ஏனோ, அந்த அருமைப் புத்தகத்தின் தமிழ் எனக்கு அவ்வளவாய் ஒத்துவரவில்லை.

மிஷனெரிப் பணித்தள சபைகளில் ஊழியம் செய்யும்போதும் இத்தகைய ஆவிக்குரிய உபகரணங்கள் (tools) அங்குள்ள மொழிகளில் இல்லையே என்ற வெற்றிடம் என்னைப் பாதித்தது. காலங்களுக்கேற்ற மொழிநடைகளில் ஆழமான

ஆவிக்குரிய தியானப் புத்தகங்களின் அவசியம் ஒவ்வொரு தலைமுறைக்கும் உள்ளது - வளரும் பணித்தள சபைகளில் அதிகமாக உள்ளது.

அத்துடன், கொஞ்சம் யோசியுங்கள்! 1882-ல் நம் தமிழ்ப் பணித்தளங்களின் புதிய சபைகளிலிருந்து எழும்பிய ஒரு இளம் ஊழியர் மற்றும் எழுத்தாளர் (முதல்/இரண்டாம் தலைமுறைக் கிறிஸ்தவர்?) வரலாறு காணும் இத்தகைய புத்தகத்தை எழுத முடிந்ததென்றால், இன்று நம் மிஷனெரிப் பணித்தளங்களில் எழும்பியுள்ள சபைகளில் உள்ள இளம் ஆவிக்குரிய எழுத்தாளர்களைப் பயிற்றுவிப்பதும், உற்சாகப்படுத்துவதும், தத்தம் மொழிகளில் தங்கள் சபையின் முழுமையான தற்சார்புக்கு வழிவகுக்கும் நூல்களையும் உபகரணங்களையும் உருவாக்க அவர்கள் கரங்களை பெலப்படுத்துவதும் நமது கடமையன்றோ?

“

மிஷனெரி இயக்கங்களின் உண்மையான வளர்ச்சி என்பது பணித்தள சபைகளின் முழுமையான வளர்ச்சியைக் கொண்டே அளக்கப்படவேண்டும். அதில் ஒன்று, புதிய சபைகளின் தொடர் வளர்ச்சி மற்றும் முதிர்ச்சிக்கான பல்மொழி நூல்கள் மற்றும் எழுத்தாளர்களை உருவாக்குவது.

”

### 3. பெரிய வெள்ளிப் பிரசங்கங்கள்

இத்தனை வருடங்களில் நான் கேட்ட எந்தவொரு பெரிய வெள்ளிப் பிரசங்கங்கமும் எனக்கு நினைவில் இல்லை. ஆனால், தூய யோவான் கல்லூரி மாணவனாக ஆரைக்குளத்திலும் (5-ம் வசனம், 1991), போப் கல்லூரி மாணவனாக அகரத்திலும் (2-ம் வசனம், 1993) நான் ஆயத்தம் செய்து அளித்த ஆரம்ப காலச் செய்திகள் இன்றும் என் மனதில் உள்ளன! என்னைப் பற்றி முன்பின் அறிந்திராத அந்தச் சபைகளின் போதகர்கள் எப்படி வாலிபனாகிய என்னை நம்பி, அனுமதித்தார்கள் என்பது இன்னமும் எனக்குப் புதிரே! ஆம், மும்மணி ஆராதனைகளின் மூலமாய் எத்தனை இளம் ஊழியர்கள் உருவாக்கப்படுகிறார்கள்!

ஆரம்பகால சுவிசேஷப் பணி நடைபெறும் புதிய பணித்தளங்களில் உள்ள அருட்பணியாளர்கள் சபைகளை நிறுவும்வரை கிறிஸ்மஸ் மற்றும் சிலுவைச் செய்திகள் என்பது அவர்களுக்கு ஒரு அனுதின அனுபவம்! அதுதான் ஆரம்ப காலத்தில் எமக்கும் நிகழ்ந்தது. ஆனால், சபைகள் நிறைந்த பணித்தளங்களிலோ, பெரிய வெள்ளி ஆராதனைகளுக்கான செய்தியாளர்களைக் கண்டுபிடிப்பது தான் பெரும் சவாலாக இருந்தது. பெரும் பக்திவினயத்துடன் நடக்கும் இவ்வாராதனைகளில் சரியாக மொழி தெரியாத மிஷனரிகள் ஆழமான சிலுவைச் செய்திகளை அளிப்பதில் சிரமப்படுவதைக் கண்டிருக்கிறேன்.

இதய மொழிகளில் பேசுபவர்களே கூடுமான வரை சபைப் பொறுப்புகளில் இருக்கவேண்டும்; ஏனென்றால், அவர்களால் மட்டுமே உள்ளூர் விசுவாசிகளுக்கு நிறைவான சேவை செய்யமுடியும். ஒவ்வொரு உள்ளூர்ச் சபைக்கும் தேவையான அடிப்படைத் தலைவர்களை ஆண்டவர் அங்கேயே எழுப்புகிறார், வைத்திருக்கிறார்; அவர்களை இனம் கண்டு, உருவாக்கி, பொறுப்புகளை அளிப்பதே ஒரு மிஷனெரியின் பணி என்பது எமது ஆழமான நம்பிக்கை.

மிஷனெரிகளையும் சுதேச ஊழியர்களையும் நம்பியே வாழ்ந்து 40 ஆண்டுகளைத் தாண்டிவிட்டிருந்த ஒரு பணித்தளக் குழுமத்தில், உள்ளூர் விசுவாசத் தலைவர்களை அடையாளம் கண்டு, அவர்களை உருவாக்கி, உற்சாகப்படுத்தினதின் ஒரு விளைவு, நாங்கள் அங்கே இரண்டு வருடங்களைக் கடக்கும்போது, பெரிய வெள்ளிப் பிரசங்கத்திற்கு எந்தச் சபையிலும் மூத்த மிஷனெரிக்கு இடமில்லாமற்போயிற்று! அது எவ்வளவு பெரியதொரு மனநிறைவு!

லெந்துகாலத்திற்கும், பெரிய வெள்ளிப் பிரசங்கத்திற்கும் யாரையாவது தேடி அலையும் நிலை இன்றும் நம் சபைகளில் உள்ளது. புதிய ஊழியர்களைப் பயன்படுத்துவதில் தவறில்லை. ஆனால், சபையின் நோக்கம் என்ன? (எபேசியர் 4:11-15) ஒவ்வொரு சேகரமும் தத்தம் சபைகளில் உள்ள பிரசங்க வரம் பெற்ற விசுவாசிகளை அடையாளம் கண்டு, தொடர்ந்து அவர்களைப் பயிற்றுவித்து, தேவனுக்காய் அவர்களைத் தங்கள் சேகர சபைகளில் களமிறக்கும்போது, சபை தனது ஊழியத்தில் ஒரு முக்கிய பங்கை நிறைவேற்றுகிறது. இத்தகைய மாதிரிகளை நம் சபைகளில் காணும் நம் (எதிர்கால) மிஷனெரிகளும் தங்கள் பணித்தளங்களில் இத்தகைய தலைமைத்துவ ஊழியப் பயிற்சிகளை முன்னெடுத்து, தங்கள் ஊழியத்தை முழுமையாய் நிறைவேற்றுவார்கள். ஆயத்தமா?

லெந்துகாலம் தொடர்பான மூன்று செய்திகளை வரலாற்றுச் சுவையுடன் வாசித்தோம். மொழிகளும், சபைகளும் நமக்குள்ள பெரும் வாய்ப்புகள் - பொறுப்புகள்! உயிர்த்தெழுந்த சிலுவைநாதர் வரலாறு படைக்க நம்மை அழைக்கிறார். தொடர்ந்து வளருவோம், பெருகுவோம்!


மாத ஆய்விதழ் சந்தா விபரம்

| சந்தா விபரம் | உள்நாடு |
| --- | --- |
| தனிப்பிரதி | ₹ 60 + நன்கொடை |
| ஆண்டு சந்தா | ₹ 600 + நன்கொடை |
| ஐந்து ஆண்டு சந்தா | ₹ 3000 + நன்கொடை |

# மிஷன் வரலாற்றுப் பயணம்:

## டோனாவூர், இடையன்குடி பகுதிகள் பார்வை

மன்னா செல்வகுமார்

சுந்தரபாண்டியபுரம், ஏப்ரல் 28:

சாம்பவர் வடகரை சேகரம் சுந்தரபாண்டியபுரம் ஞாயிறு பள்ளி மாணவ, மாணவியர்களும் ஆசிரியர்களும் பல மாதங்களாக திட்டமிட்டிருந்த மிஷன் வரலாற்றுச் சுற்றுப்பயணம் சிறப்பாக நடைபெற்றது. இந்த பயணத்தை சேகர குரு அருள்திரு. A. ஜெபரத்தினம் தலைமையில், ஞாயிறு பள்ளி ஒருங்கிணைப்பாளர் பிரின்ஸ் மற்றும் கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கத்துடன் இணைந்து ஒருங்கிணைத்தனர்.

50 பேர் கொண்ட குழு முதலில் டோனாவூர் ஐக்கியத்தை வந்தடைந்தது.

டோனாவூர் ஐக்கியத்தில் காலை உணவு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. ஐக்கிய நிர்வாகிகள் மிகச் சிறப்பாக எங்களை வரவேற்றார்கள் மிஷனெரி பணி என்பது மரிப்பதற்கு சமம் என்ற 'ஏமி கார்மைக்கல்: சாம்பலுக்கு அழகூட்டிய சாதாரண மங்கை' தேவதாசி என்பவர்கள் பெரும் கோயில்களில் திருப்பணிக்காகவும் சேவைக்காகவும் சிறுவயதில் நேர்ந்து விடப்பட்ட பெண்கள் அவர்களை கிறிஸ்துவை வாழ்நாளெல்லாம் நேசித்து தியாகங்கள் பல செய்து தன்னுடைய சுகதுக்கங்களுக்கு மதிப்பளிக்காமல் சேவை செய்திருக்கும் ஏமி கார்மைக்கலை நாம் எப்படி எடைபோடுவது? சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்ட பூப்போன்ற குழந்தைகளை அதன் கோரமான அரக்கத்தனத்தில் இருந்து காப்பாற்றி வளர்த்த சமூகசேவையை ஏமி தனியொருவராக பல்வேறு எதிர்ப்புகளுக்கு மத்தியில் செய்திருக்கிறார். சமூகப்பணியைக் கிறிஸ்தவரல்லாதவர்களும் செய்யலாம், செய்து வருகிறார்கள்; அது கிறிஸ்தவர்களின் தனிப்பட்ட சொத்துரிமையல்ல. ஆனால், ஏமியின் சமூகத் தொண்டு கிறிஸ்துவில் அவர் வைத்திருந்த அன்பினால் உருவான தன்னலமற்ற தொண்டு. தமிழ் சமூகத்தில் நிலவி வந்த அகோரத் தீங்கை, குழந்தைகளுக்கு இழைக்கப்படும் கொடுமையை வெறுத்து, ஆபத்துக்களைச் துச்சமாக எண்ணி குழந்தைகளை அவர் காப்பாற்றிப் பாதுகாத்தார். கிறிஸ்துவின் அன்பு மட்டுமே ஒருவரை இதைச் செய்யவைக்கும் என்பதை மலர் அம்மா மூலமாக நேரடியாக கண்டு கொண்டோம். ஐக்கியத்தில் மதிய உணவு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது மதிய உணவு அருந்திவிட்டு அங்கிருந்து.

இடையன்குடியில் சென்றோம் அங்கு சேகரத் தலைவர் அருள்திரு. துரைசிங் அவர்கள் எங்களை சிறப்பாக வரவேற்று தேநீர் விருந்து ஏற்பாடு செய்திருந்தார்கள். பின்னர் அவர்கள் ஒப்பிலக்கண தந்தை பேராயர் கால்டுவெல் வரலாற்று தொகுப்பினையும் அவர் வாழ்ந்த இல்லத்தினையும் எங்களுக்கு விளக்கமாக எடுத்துரைத்தார்கள். திராவிடம் என்ற இனத்துக்கு மூல முகவரி தந்த திராவிட ஒப்பிலக்கண தந்தை பேராயர் கால்டுவெல் அவர்களின் நினைவிடம் சென்றோம். அங்கு பேராயர் கால்டுவெல் நினைவிடத்தையும் எலைசா கால்டுவெல் செய்த பணிகளையும் தெரிந்துகொண்டோம். தென்னிந்திய மொழிகளுக்கான ஒப்பிலக்கண நூல் மற்றும் அவர் எழுதிய 'திருநெல்வேலி மாவட்டத்தின் அரசியல் மற்றும் பொது வரலாறுகள், சங்க இலக்கியங்கள், அகழ்வாய்வுகளில் ஈடுபட்டுப் பல பண்டைய கட்டிடங்களின் அடிப்படைகளையும், ஈமத் தாழிகள், நாணயங்கள் முதலானவற்றையும் வெளிக் கொணர்ந்துள்ளார்' என்ற வரலாற்றை தெரிந்து கொண்டோம்.







## ஏமி கார்மைக்கேல் அம்மையாரின் பணிகளை ஆவணப்படுத்தும் வரலாற்றுச் சுற்றுப்பயணம், குஜராத்தைச் சேர்ந்த பத்திரிகையாளர் சோனல் கெல்லாக் திருநெல்வேலியில்



முன்னணி பத்திரிகைகளில் 25 ஆண்டுகளுக்கும் மேல் பணியாற்றிய அனுபவம் கொண்ட மூத்த பத்திரிகையாளர் சோனல் கெல்லாக், கடந்த ஏப்ரல் 10 ஆம் தேதி திருநெல்வேலியில் வரலாற்றுச் சுற்றுப்பயணமாக வந்திருந்தார். பெண்கள் மிஷனரிகள் தமிழகத்தில் செய்த சமூக சேவைகளை ஆவணப்படுத்தும் நோக்கில், இந்தப் பயணம் மேற்கொள்ளப்பட்டது.

இந்தியன் எக்ஸ்பிரஸ், தி ஏஷியன் ஏஜ், மற்றும் DNA நியூஸ் உள்ளிட்ட முக்கிய ஊடகங்களில் பணியாற்றியுள்ள சோனல் கெல்லாக், அரசியல், சமூக நீதி, பாலியல் வன்முறை, பாலின சமத்துவம் மற்றும் வளர்ச்சி தொடர்பான தலைப்புகளில் தொடர்ந்து எழுதி வருகிறார்.



அவரது திருநெல்வேலி பயணத்தின் போது, நெல்லை தூய திருத்துவ பேராலயம், கிளாரிந்தா, சாரா டக்கர் கல்லூரி, மற்றும் டோனாவூர் ஐக்கியம் உள்ளிட்ட இடங்களில் பணியாற்றிய பெண்கள் மிஷனரிகள் – குறிப்பாக ஏமி கார்மைக்கேல் அம்மையார் – செய்த சேவைகளை நேரில் பார்வையிட்டு ஆழ்ந்த பாதிப்பையும் வியப்பையும் பெற்றார்.

இந்த பணிகளை ஆவணப்படுத்தி, வரலாற்றை உயிர்ப்பிக்க விரும்பும் அவரது முயற்சி, சமூக புரிதலுக்கும் வரலாற்று மதிப்பீட்டிற்கும் ஒரு முக்கியமான பங்களிப்பாக அமைந்துள்ளது.

## திருச்சி முதல் திருநெல்வேலி – தூத்துக்குடி வரையிலான மிஷனரி பண பார்வை: திரு. கருப்பசாமி மற்றும் திருமதி தேவ கிருபையின் பயணம்




திருச்சியிலிருந்து இரண்டு நாள் பயணமாக, திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி பகுதிகளில் மிஷனரிகள் செய்த சமூக மற்றும் ஆன்மீகப் பணிகளை நேரில் பார்வையிடும் நோக்குடன், திரு. கருப்பசாமி மற்றும் திருமதி தேவ கிருபை அவர்கள் அப்பகுதிக்கு வருகை புரிந்தனர்.

இந்த பயணத்தின் போது அவர்கள், திருச்சபையின் வரலாற்றுப் பூர்வமான முக்கிய இடங்களைப் பார்வையிட்டனர். அவற்றில் கிளாரிந்தாள் ஆலயம், தூய திருத்துவ பேராலயம், சாரா டக்கர் மகளிர் கல்லூரி, ஜான்ஸ் கல்லூரி, மிலிட்டரி லைன் சர்ச், டோனாவூர் ஐக்கியம், இடையன்குடி, மெஞ்ஞானபுரம், திருமறையூர், மற்றும் நாசரேத் ஆகியவை குறிப்பிடத்தக்கவையாகும்.


இவை தாங்கள் பார்வையிட்ட ஒவ்வொரு இடத்திலும், மிஷனரிகள் ஆழமாக செயல்பட்ட தொண்டு பணிகளை நினைவுகூர்ந்து, அவை அந்தந்த சமுதாயங்களில் ஏற்படுத்திய மாற்றங்களையும் தாக்கங்களையும் ஆழமாக சிந்தித்தனர். அவர்களின் இந்த பயணம், திருச்சபை வரலாற்றின் முக்கியத்துவத்தையும், மிஷனரி பணியின் நெடுங்கால தாக்கத்தையும் உணர்த்தும் வகையில் மிக அர்த்தமிக்கதொரு அனுபவமாக அமைந்தது.

மன்னா செல்வகுமார்

## ஐக்கிய அறை - ஒப்புரவின் ஓர் இலட்சச் சின்னம்

திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரி தாலுகாவில் அமைந்துள்ள டோனாவூர் என்னும் கிறித்தவ வரலாற்று சிறப்புமிக்க ஊரானது, 1827ஆம் ஆண்டு ஜெர்மன் மிஷனரி சார்லஸ் தியாப்பிலஸ் ஈவால்ட் ரேனியஸ் அவர்களால் நிறுவப்பட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில், 1895ஆம் ஆண்டு ஐரோப்பிய பெண் மிஷனரி ஏமிக்கார்மைக்கேல் இங்கு வந்து, சமயப்பணியோடு சமூகப் பணியிலும் ஈடுபட்டு, தேவதாசி முறையிலிருந்து மீட்கப்பட்ட பெண்களுக்கான பாதுகாப்புத் தங்குமிடமாக டோனாவூர் ஐக்கியம் எனும் அமைப்பை உருவாக்கினார்.

இந்த அமைப்பின் முக்கியமான கூறாக, 'ஐக்கிய அறை' எனும் ஒரு தனித்துவமான கட்டடம் ஆலயத்தின் அருகில் நிறுவப்பட்டது. நான்கு புறமும் திறந்த அமைப்பில் கட்டப்பட்ட இந்த அறை, ஆலயத்திற்குள் நுழைவதற்கு முன் உள்ள ஒப்புரவு முறையின் ஓர் அடையாளமாக விளங்குகிறது.



மிஷனரி ஏமிக்கார்மைக்கேல் அவர்களின் கடுமையான ஆன்மீக ஒழுக்கநெறியின் ஒரு பகுதியாக, மனக்கசப்புடன் அல்லது பகைமையுடன் உள்ளவர்கள், அந்த அறையில் நின்று ஒருவர் மற்றொருவரை மன்னித்து, சமாதானத்துடன் உள்ளே நுழைய வேண்டும் என்ற கற்பனையை அமல்படுத்தினார். அந்த அறையின் முகப்பில் 'அவர் ஆளுகை செய்ய வேண்டியது' எனும் வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது.

### இது ஏசுவின் மறைக்காத போதனையை நினைவூட்டுகிறது:

'நீ பலிபீடத்தில் உன் காணிக்கையைச் செலுத்த வந்தபோது, உன் சகோதரனுக்கேதிராக உனக்குக் குறை உண்டு என்று நினைவாயின், உன் காணிக்கையை அங்கேவிட்டு, முன் போய் உன் சகோதரனோடு ஒப்புரவாகி, பின்பு வந்து காணிக்கையைச் செலுத்து' (மத்தேயு 5:23-24).

இந்த உயரிய சிந்தனையின் அடிப்படையில் கட்டப்பட்ட டோனாவூரின் ஐக்கிய அறை, கிறித்தவ ஒப்புரவின் அடையாளமாகவே நிற்கிறது.

### திருநெல்வேலி CSI பேராயர் இல்லத்தின் முன்பாக உள்ள ஐக்கிய அறை

அதேபோன்று, திருநெல்வேலி நகரில் அமைந்துள்ள தென் இந்திய திருச்சபையின் பேராயர் இல்லத்தின்முன் அமைந்துள்ள ஐக்கிய அறையும், இதே ஆன்மீகத் தத்துவத்தினை மீளவும் பிரதிபலிக்கிறது. ஒரு வட்டவடிவத் திறந்தவெளிப் பூமியில் அமைந்துள்ள இந்த அறை, பெரிய ஆலயங்கள் மற்றும் ஆளுமைக் கட்டிடங்களுக்குச் செல்லும் முன்னோட்டமாகப் பயன்படுகிறது.

இந்த அறையின் நோக்கமும் டோனாவூர் ஐக்கிய அறையின் நோக்கத்தையே பிரதிபலிக்கிறது. ஆயர் இல்லம் என்பது நிர்வாகத் தலைமையகம் மட்டுமல்ல; அது ஒரு ஆன்மீகத் தாங்கியாகவும், வழிகாட்டியாகவும் அமைந்திருக்க வேண்டும். அதற்கு முன்பாக உள்ள இந்த ஐக்கிய அறை, ஒப்புரவின் தேவை, சுய பரிசோதனை, தாழ்மை, மன்னிப்பு போன்ற கிறித்தவ உள்பார்வைகளைக் கடைபிடிக்க வேண்டியதைக் நினைவூட்டும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

பேராயர் இல்லம் எந்நாளும் மக்கள் கூடும் இடமாகவும், ஆலோசனை நடைபெறும் இடமாகவும், ஆன்மிகப் பணிகள் முடிவெடுக்கப்படும் இடமாகவும் இருப்பதால், அதன் முன் இந்த 'ஐக்கிய அறை' அமைந்திருப்பது வெறும் கட்டடக் கூறாக அல்ல, ஓர் உள் ஆன்மிகப் பயணத்திற்கு முன்னிலை வகிக்கும் விழிப்புணர்வாகும்.

### ஒப்புரவின் கட்டிட வடிவம்: கட்டிடக்கலைக்கு ஒரு சாட்சியம்

இந்த இரண்டு இடங்களிலும் காணப்படும் ஐக்கிய அறைகள், ஒரு பழங்கால ஆன்மீகக் கட்டுப்பாட்டை ஒவ்வொரு வரலாற்று கட்டடத்திலும் வெளிக்காட்டுகின்றன. அவை வெறும் பழைய மிஷனரி நினைவாக இல்லாமல், இன்றைய திருச்சபை மற்றும் சமூகத்திற்கும் உரித்தான உணர்வுகளையும் கடமைகளையும் மீட்டெடுக்கின்றன. ஒவ்வொரு சந்திப்பிற்கும் முன் மனவுருக்கமும் மன்னிப்பும் வேண்டியவை என்பதை இந்த கட்டிடங்கள் நினைவூட்டுகின்றன.

இவையனைத்தும், கிறித்தவ மரபுக்குள் ஒளிந்திருக்கும் அமைதி, ஒப்புரவு, சமாதானம் ஆகியவற்றை மீளவும் வெளிக்கொணரும் தொன்மையான முயற்சிகளாகும். இவை மறைபொருள் கொண்ட கட்டடங்கள் - ஒவ்வொரு கல்லும் ஒரு போதனையை பேசுகிறது. இவை அனாதியாகவும் அகத்தியமாகவும் தவிர்க்கப்பட்டு வந்த உணர்வுகளை வாழ்வாக்கியமைக்கும் சான்றுகள்.

இன்றைய திருச்சபை சூழலில், நம்மிடம் ஒப்புரவு என்பது தளர்ந்துவிட்ட ஒரு பண்பாகவே தெரிகிறது. ஆனாலும் டோனாவூரின் ஐக்கிய அறையும், திருநெல்வேலி CSI பேராயர் இல்லத்தின் முன்பாக உள்ள ஐக்கிய அறையும், இம்மூலக்குணத்தை மீளவும் உயிர்ப்பிக்கின்றன. இரண்டும் கிறித்தவ ஆன்மீக மரபின் தனிச்சிறப்பான கூறுகளாகவும், இருமுகச் சாட்சிகளாகவும் திகழ்கின்றன.

**மன்னா செல்வகுமார்**




# திருநெல்வேலி திருச்சபையின் வரலாறு

## பகுதி 7

திருமதி. ரெமினா சுஜித்



கடந்த மாதத்தின் தொடர்ச்சியான அருள்திரு. சத்தியநாதன் மற்றும் ஜெனிக்கே (Jaenicke) என்ற மிஷனரியின் பயணங்களையும், அவரது பணிகளையும் தொடர்ந்து காண்போம் மற்றும் அவரோடு கெரிக்கே ஆற்றிய சுவிசேஷப் பணியைப் பற்றியும் காண்போம். திருநெல்வேலியின் தொடக்ககால சுவிசேஷப் பணிகளில் அனைத்து கிறிஸ்தவ சபைகளின் வளர்ச்சியும் அதன் சவால்களும் முக்கியமானவை. பல ஊர்களில் தேவாலயங்கள் கட்டப்பட்டு, கிறிஸ்தவ விசுவாசிகள் பெருகிய காலகட்டம் இது. இந்தக் காலக்கட்டத்தில் ஐரோப்பிய மிஷனரிகளும் இந்திய உபதேசியார்களும் இணைந்து செயல்பட்ட விதமும், அவர்கள் எதிர்கொண்ட சமூக அரசியல் சவால்களும் குறிப்பிடத்தக்கவை.

ஜெனிக்கே தூத்துக்குடியிலிருந்து மணப்பாடுக்குப் புறப்பட்டார், அவர் 11ஆம் தேதி மணப்பாடு வந்தடைந்தார்.

### மணப்பாடு திருச்சபையும் தேவ கிரியைகளும்

மணப்பாடு திருச்சபையானது திரு. மெக்கர்ன் (Mr. Meckern) அவர்களின் முயற்சியால் உருவாக்கப்பட்டது, இதில் முந்நூறு நபர்கள் இருந்தனர். இவர்கள் பெரும்பாலும் நெசவாளர்கள், திரு. மெக்கர்ன் அவர்கள் இவர்களுக்கு வீடுகளை கட்டிக் கொடுத்ததோடு பணமும் முன்பணமாக வழங்கியதால், இவர்கள் தற்போது மிகுந்த வசதியுடன் வாழ்ந்தார்கள்; ஆனால் ஆவிக்குரிய வாழ்க்கையில் இவர்கள் தூத்துக்குடியை விட பின்தங்கிய நிலையில் இருந்தனர். இதை முன்கூட்டியே அறிந்ததாலும், அங்குள்ள உபதேசியார் திறமையற்றவர் என்பதையும் அறிந்து, அவர் திரு. மெக்கர்னிடம் சிறந்த நபரை நியமிக்குமாறு கேட்டுக் கொண்டார்; அதிர்ஷ்டவசமாக அப்போது தூத்துக்குடியில் இரண்டு உபதேசியார்கள் இருந்தனர், உடனே திரு. மெக்கர்ன் அவர்களில் சிறந்தவரை இங்கே அனுப்பினார். அங்குள்ள கிறிஸ்தவர்களுக்கு மாலை நேரங்களில் வேலை இல்லாததால், அவர்கள் ஒவ்வொரு மாலையிலும் கிறிஸ்தவ கோட்பாடுகளையும், தேவனுடைய வார்த்தையைக் கேட்கவும் ஜெபங்களை செய்யவும் தேவாலயத்திற்கு வர வேண்டும் என ஏற்பாடு செய்யப்பட்டது. உபதேசியார் நேர்மையான மற்றும் சுறுசுறுப்பான வாலிபர்; எனவே சபையின் நிலை விரைவில் மேம்படும் என அவர் நம்பினார். இதுவே பின் நாட்களில் மாலை ஆராதனைகள் நமது ஆலயங்களில் தொடர்ந்து நடை பெற உதவியது.

ஐந்து நாட்களுக்குப் பிறகு, ஜெனிக்கே பாளையங்கோட்டைக்கு (Palamcottah) திரும்பினார், வழியில் ஆழ்வார்திருநகரி (Alvártirunagari) மற்றும் பர்ப்பநாதபுரம் ஆகிய இடங்களில் நின்றார். பாளையங்கோட்டையில் தேவாலயம் அப்போது முடிக்கப்பட்டிருந்தது, மேலும் அங்கும் பூவானிக்கும் (Púvání) அவர் மேற்கொண்ட பயணங்கள் பற்றிய குறிப்புகள் பின்வருமாறு:

'ஜூலை 22 அன்று அவர் பர்ப்பநாதபுரத்தில் அவரது விடைபெறும் பிரசங்கத்தை நிகழ்த்தினார், 27ம் தேதி பாளையங்கோட்டையிலும், 29ம் தேதி பூவனியிலும்; கடைசியானது (பூவனியில் உள்ள) புதிய தேவாலயத்தின் பிரதிஷ்டை பிரசங்கமாக இருந்தது. '

ஆகஸ்ட் 5ம் தேதி சிறப்பு வேலைக்காக பர்ப்பனாதபுரத்திற்கு சென்று, அங்கு பொதுவான ஆராதனையை நடத்தினார். ஆகஸ்ட் 9ம் தேதி பர்ப்பநாதபுர சபையின் மீது விழுந்த கடும் புயலை அவரால் தடுக்க முடிந்தது. கம்பெனி அரசாங்கத்தின் கீழ், அங்குள்ள கிறிஸ்தவர்கள் சில அரசு சேவைகளிலிருந்து விலக்கு பெற்றிருந்தனர்; ஆனால், நவாபின் ஆட்கள் அவர்கள் விலக்குப்பெற்ற பிறகும் அந்த சேவைகளைச் செய்யுமாறு வற்புறுத்தினர்; அவர்கள் மறுத்து, தங்களுக்காக பேசுமாறு அவரிடம் கெஞ்ச வந்தனர். அவர் அவர்களிடம் மிகவும் தீவிரமாக எடுத்துரைத்தார், மேலும் பல விஷயங்களில் அவர்கள் தங்களுக்கும் திருநெல்வேலி கிறிஸ்தவர்கள் அனைவருக்கும் துன்புறுத்தலை அளிப்பார்கள் என்றும், அவர்களது தேவாலயங்கள் இடிக்கப்படும் என்றும், அவர்கள் இஸ்லாத்தை (Maniu) தழுவ நிர்பந்திக்கப்படுவார்கள் என்றும் சுட்டிக்காட்டினார். கிறிஸ்தவர்கள் என்றால் எப்போதும் கீழ்ப்படிதலுக்கு முன்மாதிரியாக இருக்க கடமைப்பட்டுள்ளனர் என்பதை அவர்களுக்கு வலியுறுத்தி, நீண்ட நேரம் அறிவுறுத்தினார். அவர்கள் தங்கள் தவறுக்காக மனம் வருந்தி, தேவைப்படும் அனைத்தையும் செய்வதாக வாக்குறுதி அளித்தனர். ஆகஸ்ட் 12ம் தேதி, அவர்களின் முதல் மறுப்பால் எந்த தீங்கும் ஏற்படாது என்பதை அவர் அறிந்து கொண்டார்.

ஜெனிக்கே இறுதியாக ஆகஸ்ட் 28ம் தேதி தஞ்சாவூருக்குப் புறப்பட்டார், சில நாட்கள் தூத்துக்குடியில் தங்கினார், அங்கு திரு. மெக்கர்ன் ஸ்வார்ட்ஷிடம் கிறிஸ்தவ கோட்பாடுகள் மற்றும் கடமைகள் குறித்த தமிழ் பிரசங்கங்களின் தொகுப்பை வெளியிடுமாறு கேட்டுக் கொண்டார், அச்சிடும் செலவை ஏற்க வாக்குறுதி அளித்தார், ஏனெனில் அத்தகைய புத்தகம் கர்நாடகத்தில் உள்ள உபதேசியார்களுக்கு மட்டுமல்லாமல் இலங்கையின் (Ceylon) கிறிஸ்தவர்களுக்கும் பெரிதும் பயன்படும். அவர் தஞ்சாவூரில் அடிக்கடி காய்ச்சல் தாக்குதல்களால் அவதிப்பட்டார், மேலும் 1794 பிப்ரவரி வரை பாளையங்கோட்டைக்குத் திரும்ப முடியவில்லை.

1793ல் திருநெல்வேலியில் குருவானவர் சத்தியநாதன் அவர்களின் பணி பற்றிய விவரங்கள் நம்மிடம் இல்லை, ஆனால் கால்ட்வெல் தயாரித்த மிஷன் பதிவேட்டின் நகல் பெரும்பாலும் பாளையங்கோட்டை அருகில் உள்ள பல்வேறு கிராமங்களில் தனிநபர்களின் கணிசமான எண்ணிக்கையைக் காட்டுகிறது. சிவந்திபட்டியில் மூன்று அல்லது நான்கு மறவர் இன மக்கள் கூட்டத்தை சார்ந்த குடும்பங்கள் ஞானஸ்நானம் பெற்றனர்.

ஜெனிக்கே அவர்கள் 1794 பிப்ரவரி 19ம் தேதி தஞ்சாவூரிலிருந்து பாளையங்கோட்டைக்குக் கிளம்பி , மார்ச் 18ம் தேதி பாளையங்கோட்டையை அடைந்து, 1795 ஜூலை 7ம் தேதி வரை அங்கேயே தங்கினார். ஆனால் அவரது நாட்குறிப்பு அவர் அடிக்கடி உடல்நிலை சரியில்லாமல் இருந்ததையும், சுற்றுப்பயணம் குறைவாகவே மேற்கொள்ள முடிந்ததையும் காட்டுகிறது, அவர் பாளையங்கோட்டைக்கு சுமார் ஆறு முறை பயணித்ததாகவும், பூவனிக்கு இரண்டு அல்லது மூன்று முறை சென்றதாகவும் குறிப்பிடுகிறார்;

### ஜெனிக்கே நாட்குறிப்புகளில் இருந்து :

ஒரு சமயம் பூவானியில், 'முழு மாவட்டத்திலும் உள்ள கிறிஸ்தவர்கள் ஒன்று கூடினர்; அவர்கள் ஐம்பதுக்கும் மேற்பட்டவர்கள். நான் இரண்டு பிரசங்ககளை வழங்கினேன், மேலும் பல தனிநபர்களுடன், குறிப்பாக பிரிந்து போக விரும்பிய இரண்டு திருமணமான தம்பதிகளுடன் பேசினேன்; அவர்கள் இணக்கமாயினர். '

சேரன்மகாதேவி (Sharmadevi) மற்றும் அம்பாசமுத்திரம் (Ambasamudram) ஆகிய இடங்களுக்குச் சென்றபோது, அவர் பிந்தைய இடத்தில் சில கிறிஸ்தவர்களைக் கண்டார்; அவர் பாஞ்சலங்குறிச்சியில் (Panjalamkurichi) உள்ள 'கிறிஸ்தவர்களிடம்' பிரசங்கித்ததாகவும் குறிப்பிடுகிறார். ஒன்றுக்கும் மேற்பட்ட முறை அவர் ஆத்தூரில் இரண்டு மூன்று நாட்கள் தங்கினார், அங்கு சில கிறிஸ்தவர்கள் அல்லது குறைந்தபட்சமாக கிறிஸ்தவ ஆர்வம் உள்ளவர்கள் இருந்திருக்கலாம் என ஊகிக்கலாம்.

1795 ஜூலையில் திருநெல்வேலியை விட்டு வெளியேறிய ஜெனிக்கே முதலில் இராமநாதபுரம் சென்று, அங்கு மூன்று வாரங்கள் தங்கி, பரிசுத்த நற்கருணை ஆராதனையில் பதினைந்து பேருடன் கலந்து கொண்டு, பின்னர் தஞ்சாவூருக்குச் சென்றார். குருவானவர் சத்தியநாதன் 1794 செப்டம்பர் முதல் திருநெல்வேலியிலிருந்து வெளியேறி, அந்த நேரத்தில் மூன்று அல்லது நான்கு மாதங்கள் இராமநாதபுரத்தில் இருந்து, பாளையங்கோட்டையை விட்டு வெளியேறுவதற்கு சில வாரங்களுக்கு முன்பு திரும்பி வந்தார்.

ஜெனிக்கே தொடர்ந்து உடல்நலமின்றி இருந்ததாலும், இராமநாதபுரத்தில் புதிய தேவாலயம் கட்டப்பட்டு வந்ததாலும், அவர் 1796 செப்டம்பர் வரை பாளையங்கோட்டைக்குத் திரும்பவில்லை. ஆகஸ்ட் மாதம் 1794 ஸ்வார்ட்ஸ் திரு. வீட்லிக்கு எழுதினார்:

'உபதேசியார் அவர்கள் தேவாலயத்தின் சீரழிந்த நிலை குறித்து என்னிடம் தெரிவித்துள்ளார்; அவருக்கு என்ன செய்ய வேண்டும் என்று ஆலோசனை வழங்கவும் மேலும் தயவு செய்து நீங்கள் சில பணத்தை செலவழித்தால் நான் உங்களுக்கு அதை திருப்பிச் செலுத்தி மகிழ்ச்சியடைவேன். 20 ஸ்டார் பகோடாக்களுடன் ஒரு சரியான தேவாலயத்தை கட்டலாம் என நான் நினைக்கிறேன், அது அவ்வளவு அகலமாக இருக்கக் கூடாது; 14 அல்லது 15 அடி அகலம் போதுமானது';

மறுபடியும் செப்டம்பர் 26ல் ஸ்வார்ட்ஸ் அவருக்கு எழுதினார்:

'தற்போது தேவாலயத்தை இடித்து புதிய கட்டிடத்தை

எழுப்புவது சரிவராது என நான் நினைக்கிறேன். அது மழையைத் தடுக்க வைக்கோலால் மூடப்பட்டிருந்தால், அது தற்போதைக்குப் போதுமானது. திரு. ஜெனிக்கே உங்களிடம் திரும்பி வரும்போது, நாம் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதைப் பார்ப்போம். '

இதற்குச் சிறிது காலத்திற்குப் பிறகு, கர்னல் மார்டின்ஸ் (Col. Martinz) தேவாலயத்தை மீண்டும் கட்ட முன்வந்தார்; இந்த முன்மொழிவை ஷ்வார்ட்ஸ் நன்றியுடன் ஏற்றுக்கொண்டார், ஆனால் ஜெனிக்கே இராமநாதபுரத்தில் இருந்தபோது, ஏறக்குறைய ஒன்றரை ஆண்டுகளுக்குப் பிறகே கட்டுமானம் தொடங்கியது. ஜெனிக்கேயின் நாட்குறிப்பிலிருந்து பின்வரும் பகுதிகள் எடுக்கப்பட்டுள்ளன:

'திங்கள், ஏப்ரல் 18, 1796 (அவர் வந்த அடுத்த நாள்) – மாலையில் நான் கர்னல் மார்டின்ஸ் மற்றும் திரு. பவுனி (Mr. Powney) ஆகியோரைச் சந்தித்தேன். நான் உபதேசியாரிடமும் மற்ற கிறிஸ்தவர்களிடமும் பேசினேன், ஒவ்வொரு நாளும் மாலை ஆராதனைகளை நடத்தினேன். '

'ஞாயிறு 24 – நான் மலபாரியில் முற்பகலில் பிரசங்கித்தேன், மேலும் பிற்பகலில் பிரசங்கத்தின் ஒரு பகுதியை மீண்டும் கூறினேன். '

'செவ்வாய் 26 – கர்னல் மார்டின்ஸ் எனக்கு சிறிய தேவாலயம் கட்டுவதற்காக 500 பகோடாக்களை வழங்கினார்.'

'வியாழன், மே 5, கிறிஸ்து பரமேறிய திருநாள் – ஞாயிறு கிழமையைப் போல நாங்கள் இரண்டு ஆராதனைகளை நடத்தினோம். நான் வேதாகமத்தில் நிருபத்தில் உள்ள தேவனுடைய வார்த்தைகளை பிரசங்கித்தேன், பின்னர் 21 பேருக்கு பரிசுத்த நற்கருணை வழங்கினேன்.'

'சனி 7 – கர்னல் தேவாலயத்திற்கான சரியான இடத்தைத் தீர்மானித்தார்.'

'திங்கள் 9 – நாங்கள் தேவாலய வளாகச் சுவருக்கான வரைபடத்தை வரைந்தோம்.

அந்த நேரத்திலிருந்து ஆகஸ்ட் 26 வரை தேவாலயக் கட்டுமானம் தொடர்பாக எனக்கு நிறைய வேலை இருந்தது; நான் ஞாயிறுகளிலும் வெள்ளிகளிலும் கிறிஸ்துவின் வார்த்தையை பிரசங்கித்தேன், மேலும் மாலை ஆராதனைகளை நடத்தினேன்.'

இதற்கிடையில், J. P. ரோட்லர் (Rottler), பெரும்பாலும் தனது உடல்நலத்திற்காக, 1795 இலையுதிர் காலத்தில் இராமநாதபுரம் மற்றும் பாளையங்கோட்டைக்குப் பயணம் மேற்கொண்டார். அவர் செப்டம்பர் 30 முதல் அக்டோபர் 21 வரை இராமநாதபுரத்தில் இருந்தார், மேலும் இராமேஸ்வரம் மற்றும் தனுஷ்கோடி ஆகிய இடங்களுக்குச் சென்றதை நீண்ட விவரிப்பாக வழங்குகிறார், அதில் ஒரு பகுதி இங்கே குறிப்பிடப்பட்டுள்ளது:

(தனிதுறையில் (Tanitural) கப்பலில் ஏறியபின்) 'படகு துடுப்பு போடப்பட்டது, தீவை அடைய ஒன்றரை மணி நேரம் ஆனது. . . பாம்பன் (Pámban), ஒரு சிறிய இடிந்த கோட்டை, அதில் சில சிப்பாய்கள் காவலில் உள்ளனர், இது நீரின் விளிம்பில் கட்டப்பட்டுள்ளது. விருந்தினர் இல்லம், இதிலிருந்து சிறிது தொலைவில் அமைந்துள்ளது, அது விசாலமானது, ஆனால் இந்த நாட்டில் உள்ள பல இல்லங்களைப் போலவே சுத்தமாக பராமரிக்கப்படவில்லை. பிற்பகலில் இராமேஸ்வரத்தையே அடையும் முன் ஏழு மைல் நடக்க வேண்டியிருந்தது. பாதை கற்களால் பதிக்கப்பட்டிருந்தது, ஏனெனில் முழு தீவிலும் நிலம் மிகவும் மணலாக உள்ளது. பாதையின் இரு பக்கங்களிலும் தோட்டங்கள் காணப்பட்டன, அவற்றின் மரங்கள் பாதையை நிழலிட்டன'

'அக்டோபர் 8 அன்று இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி மனாருக்கும் (Manaar) சென்று பார்க்க முடிவு செய்தேன், நான் படகை என்னைப் பின்தொடர வாடகைக்கு எடுத்திருந்தேன். எனினும், நான் முதலில் நிலவழியாக மகுடராஜா சத்திரத்திற்கு முன்னேறிச் சென்றேன்; நாங்கள் கிழக்கிலிருந்து மேற்கு வரை நீண்ட நிலப்பகுதியில் செல்ல வேண்டியிருந்தது, ஒரு பக்கம் மிகவும் அமைதியான வடக்கு கடல் இருந்தது, மறுபக்கம் எழுச்சிமிக்க தென்கடல் தன்னைத்தானே மோதிக் கொண்டிருந்தது. தனுஷ்கோடி, புகழ்பெற்ற குளிக்கும் இடம், நான் குறிப்பிட்ட சத்திரத்திலிருந்து அரை மணி நேரம் தொலைவில், தீவின் கிழக்கு முனையில் அமைந்திருந்தது. அங்கு வாழும் பிராமணர்களுடன் மீண்டும் பல விவாதங்களை நான் நடத்தினேன். எனது படகு பிற்பகலில் வந்து சேர்ந்தது, ஆனால் தென்றல் மிகவும் வலுவாக வீசியதால், அங்கேயே இரவைக் கழிக்க முடிவு செய்தேன், மறுநாளும் அது தொடர்ந்ததால், மனாருக்குச் செல்லும் திட்டத்தைக் கைவிட்டு, இராமேஸ்வரத்திற்குத் திரும்பினேன். '

அக்டோபர் 21ம் தேதி ரோட்லர் இராமநாதபுரத்திலிருந்து கடற்கரை வழியாக தூத்துக்குடிக்குச் சென்றார், தூத்துக்குடியிலிருந்து ஒரு மணி நேர தூரத்தில் உள்ள மாப்பிள்ளையூரணியில் (Mápillaiyárani), முன்னாள் டச்சு கண்காணிப்பாளர் வசித்து வந்த இடத்தில், அவர் தமிழ் சபைக்கு ஞாயிறு ஆராதனைகளை நடத்தினார். அக்டோபர் 26ம் தேதி அவர் தூத்துக்குடியை விட்டு வெளியேறினார், மறுநாள் தாம்பரபரணி ஆற்றைக் கடந்தார், காட்சிகளை மிகவும் ரசித்தார்:

'மேற்கே எங்களுக்கு முன்னால் பெரிய மலைத்தொடர் இருந்தது, அதே சமயம் எங்களுக்கு அருகிலும் சுற்றிலும் சிறிய மலைகளும் குன்றுகளும் இருந்தன; நாங்கள் நெல் மற்றும் பிற வயல்களின் அழகிய சமவெளியில் பயணித்தோம். அங்கு நிறைய பனை மரங்கள் இருந்தன, மேலும் எல்லா பக்கங்களிலும் தாராளமாக நீர் இருந்தது.'

பாளையங்கோட்டையில் அவர் தேவாலயத்திற்குச் சொந்தமான வீட்டில் தங்கினார், அங்கு ஜெனிக்கேயும் தங்கியிருந்தார், அதை மிகவும் வசதியாகவும் நல்ல நிலையிலும் கண்டார். அவர் பாளையங்கோட்டையில் நவம்பர் 16 வரை தங்கினார்:

'இந்த மூன்று வாரங்களில், நான் இந்திய குருமார் சத்தியநாதனுடன் தமிழ் சபையின் பணியைப் பகிர்ந்து கொண்டேன், இது நிச்சயமாக கடலூர் (Cuddalore) அல்லது

நாகப்பட்டினம் (Negapatam) சபையைப் போலவே வலுவானது, ஆனால் சற்று சிதறியுள்ளது. கோட்டையிலிருந்து ஒரு ஜெர்மன் மைல் தொலைவில் உள்ள பர்பநாதபுரம் கிராமத்தில் அறுபது கிறிஸ்தவர்கள் இருந்தனர், அவர்களுக்கு ஒரு ஜெப கூடாரம் உண்டு; நான் அவர்களுடன் ஒரு நாள் செலவழித்து மகிமையான ஆராதனையை நடத்தினேன்.

'நான் ஒரு நாள் உபதேசியார்கள் தேவசகாயம் (Dévasagayam) மற்றும் கிறிஸ்தியன் (Christian) ஆகியோருடன் திருநெல்வேலி மற்றும் தச்சநல்லூருக்கு சென்றேன். காலை 9 மணிக்கு நாங்கள் ஆற்றில் ஒரு படகில் ஏறினோம், அரை மணி நேரத்திற்கும் குறைவாக திருநெல்வேலியை அடைந்தோம், அது மிகப் பெரியது, ஆனால் இனிமையானதல்ல. நான் தற்போதைய ஆட்சியாளர் முகம்மது எதுபார் கான் (Muhemmed Edubar Khan) அரண்மனைக்குச் சென்றேன், அவர் பொதுவாக சாதி கான் (Sandi Khan) என்று மட்டுமே அழைக்கப்படுகிறார், மேலும் கர்நாடக நவாபின் உறவினர் ஆவார். அவருக்கு எழுபது வயதாகிறது, மேலும் நாட்டின் நலனில் அவர் சிறிதளவே அக்கறை காட்டுகிறார்.

**ரோட்லர் வடக்கு நோக்கிய பயணத்தின் சில விவரங்களைத் தருகிறார்:**

'நான் உபதேசியார் கிறிஸ்தியனை என்னுடன் அழைத்துச் சென்றேன். மாலை நேரத்தில் நாங்கள் சித்தார் ஆற்றை அடைந்தோம், அது பல பாறைகளைக் கொண்டுள்ளது, அவற்றுக்கு இடையில் நீர் சிறிய மற்றும் பெரிய கால்வாய்களில் ஓடுகிறது, இது கடப்பதை மிகவும் கடினமாக்குகிறது. இந்த முறை குறைந்த அளவே நீர் இருந்தது, ஆனால் அது நிரம்பியிருக்கும்போது, அதைக் கடக்க முடியாது. அருகிலுள்ள பிரஞ்சேரி (Pirancheri) என்ற இடத்தில் விருந்தினர் இல்லம் மோசமாக இருந்ததால், அங்கு இரவு தங்கும் எங்கள் திட்டத்தைக் கைவிட்டு, கயத்தாறுக்கு ஒரு ஜெர்மன் மைல் தொலைவு கூடுதலாகச் செல்ல வேண்டியிருந்தது. அங்கு ஒரு ஐரோப்பிய முகாம் இருந்தது , நாங்கள் மருத்துவரின் காலியாக இருந்த வீட்டில் தங்கினோம், ஏனெனில் வீரர்கள் ஏறக்குறைய அனைவரும் மன்னாருக்கு எதிரான நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டிருந்தனர்.

'17ம் தேதி. . . பிற்பகலில் நாங்கள் பெருவழியில் கோயில்பட்டிக்குச் சென்றோம், அங்கு இரவு தங்கினோம். '

'19ம் தேதி. . . இரவில் நாங்கள் விருதுப்பட்டியில் (Virudupatti) தங்கினோம். . . 20ம் தேதி நாங்கள் அங்கேயே தங்க வேண்டியிருக்கும் என்று தோன்றியது, ஏனெனில் இரவிலும் முழு காலை நேரமும் மழை பெய்தது, இருப்பினும், பிற்பகலில் நாங்கள் மழையிலேயே புறப்பட்டோம், மிகுந்த சிரமத்துடன் திருமங்கலத்தை அடைந்தோம், நான் அங்கு இரவு சுமார் 8 மணிக்கு வந்து சேர்ந்தேன்; எனினும், என்னைப் பின்தொடர்ந்தவர்கள் இரண்டு மணி நேரம் கழித்தே வந்தனர், சாலை மிகவும் மோசமாக இருந்தது. '

மதுரையில் ரோட்லர் மூன்று நாட்கள் தங்கி, காட்சிகளைக் கண்டார், ஆனால் அங்கு கிறிஸ்தவர்களைப் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. திண்டுக்கல் பற்றி ரோட்லர் :

'இங்கு ஒரு சிறிய தமிழ் திருச்சபை உள்ளது, அவர்களுக்கு நான் ஞாயிறு ஆராதனையை நடத்தினேன். இங்கு தேவாலயம் இல்லாததால், நாங்கள் மூரிஷ் (அதாவது, முகமதிய) மசூதியில் கூடினோம். . . பாடல் பாடும்போது, சில முகமதியர்கள் (Moors) உள்ளே வந்து, இருந்தனர் . '

ஜெனிக்கே 1796 செப்டம்பரில் மூன்றாவது முறையாக பாளையங்கோட்டைக்கு வந்தார்; அவர் 1797 பிப்ரவரி வரை அங்கு தங்கினார். அவரது உடல்நிலை இன்னும் மிகவும் மோசமாக இருந்தது; டிசம்பர் மற்றும் ஜனவரியில் அவர் கிட்டத்தட்ட தொடர்ந்து உடல்நலமின்றி இருந்தார், மேலும் பல சந்தர்ப்பங்களில் தாம் மரணத்தின் விளிம்பில் இருப்பதாக நம்பினார்.

1797 பிப்ரவரி இறுதியில் அவர் இராமநாதபுரத்திற்குத் திரும்பி, தேவாலயக் கட்டுமானத்தைக் கண்காணித்து, அக்டோபர் 30 வரை அங்கு தங்கினார். செப்டம்பர் 6ம் தேதி கடிதத்தில் அவர் பொருட்கள் மற்றும் தொழிலாளர்களைப் பெறுவதில் சிரமம் இருந்ததால் பணி மெதுவாக முன்னேறியதாக எழுதுகிறார்; மேலும் நுழைவாயில் இடிந்து மீண்டும் கட்டப்பட வேண்டியிருந்தது. அவர் தொடர்ந்து கூறுகிறார்:


'கட்டுமானத்தைக் கண்காணிப்பதற்காக என் இருப்பு இங்கு அத்தியாவசியமாக இருக்கிறது. எனது மிஷன் கடமைகளை நிறைவேற்றுவதிலிருந்து தற்காலிக வேலைகள் என்னைத் தடுக்கும்போது, என் மனம் உண்மையான திருப்தியை அனுபவிக்க முடியவில்லை. ' என்ன ஒரு ஆழமான மற்றும் திருப்தியற்ற வார்த்தை. இதை வாசிக்கும் போது அவரால் கிறிஸ்துவை பிறருக்கு அறிவிக்காமல் இருக்க முடியாது என்பது தெரிகிறது.

'1791 முதல், இராமநாதபுரம் அடிக்கடி மிஷனரிகளால் சந்திக்கப்பட்டுள்ளது, நானும் ஆறு சந்திப்புகள் நிகழ்த்தியுள்ளேன் ; ஆனால் எங்கள் தங்குதல் பெரும்பாலும் குறுகிய காலமாக இருந்ததால், சபையின் பல உறுப்பினர்களின் உண்மையான நிலை கண்டறியப்படவில்லை. . . ஆனால் சிறிது காலத்திற்கு முன்புதான், முகமூடி கழன்றது; இப்போது அவர்கள் பாவம் என்பது துன்பத்தின் ஆதாரம் என்பதையும், அதை இலேசாகக் குணப்படுத்துவது அதை முற்றிலும் அகற்றுவதற்கான வழி அல்ல, மாறாக அதை உறுதிப்படுத்தும் வழி என்பதையும் ஒப்புக்கொள்கின்றனர். எனவே இப்போது அவர்களில் பலர் உண்மையிலேயே தங்கள் பாவங்களை விட்டுவிட்டு, நாம் இரட்சிக்கப்படக்கூடிய ஒரே வழியாம் கிறிஸ்துவை பின்பற்றி செல்ல உறுதியாக இருக்கிறார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இப்போது உள்ளது.'

அடுத்த விவரிக்கப்படவிருக்கும் நிகழ்வுகளை எதிர்கொள்வதற்கு வசதியாக, 1800ல் இராமநாதபுரத்தில் உள்ள தேவாலயத்தின் பிரதிஷ்டை பற்றி கெரிக்கே (Gericke) எழுதிய விவரிப்பை இங்கே கொடுப்பது பொருத்தமானது. ஜெனிக்கே தஞ்சாவூரில் தொடர்ந்து மிகவும் மோசமான உடல்நிலையுடன், அடிக்கடி காய்ச்சல் தாக்குதல்களுடன் இருந்தார், தெற்கிற்கு ஒரு

பயணம் அவருக்கு நலம் அளிக்கலாம் என்று நம்பப்பட்டது; எனவே அவரும் கெரிக்கேயும் 1800 பிப்ரவரி 7ம் தேதி தஞ்சாவூரிலிருந்து புறப்பட்டு, 12ம் தேதி இராமநாதபுரத்தை அடைந்தனர்.

**கெரிக்கே எழுதுகிறார்:**



'16ம் தேதி ஒரு பண்டிகை நாளாக இருந்தது, ஏனெனில் ஒரு வருடத்திற்கு முன்பு கட்டி முடிக்கப்பட்ட தேவாலயம் பிரதிஷ்ட்டைப் பண்ண வேண்டியிருந்தது, மேலும் இங்குள்ள ஆங்கிலேயர்கள் முழு கடற்கரை மற்றும் வங்காளத்திலும் (Bengal) அந்த மாதத்தின் 6ம் தேதி கொண்டாடப்பட்ட நன்றி செலுத்தும் ஆராதனையை நடத்த எங்களுக்காகக் காத்திருந்தனர். ஆங்கில ஆராதனை காலை 8 மணிக்கு நடைபெற்றது. கலெக்டரின் சகோதரிக்கும் ஆங்கில கம்பெனியின் சிவில் சர்வீஸில் உள்ள உயர் அதிகாரி ஒருவருக்கும் இடையே திருமணம் நடைபெற்ற பிறகு இங்குள்ள அனைத்து ஆங்கில ஆண்களும் பெண்களும் பரிசுத்த நற்கருணை ஆராதனையில் கலந்து கொண்டனர், . '

'தமிழ் ஆலய ஆராதனையின் தொடக்கத்தில் பிரதிஷ்டை செய்வதற்கான ஜெபத்தை வழங்குமாறு நான் திரு. ஜெனிக்கேயைக் கேட்டுக் கொண்டேன், ஏனெனில் தேவாலயம் அவரது மேற்பார்வையில் கட்டப்பட்டது. அவர் அவ்வாறு செய்தார், ஆனால் அவ்வாறு செய்யும்போது அவர் மிகவும் பாதிக்கப்பட்டார், அவரது கைகள் மற்றும் கால்கள் கடுமையாக நடுங்கத் தொடங்கின, அவர் உடனடியாக தேவாலயத்தை விட்டு வெளியேற வேண்டியிருந்தது. '

'தமிழ் ஆராதனையில் திடப்படுத்துதல் (Confirmation), பல ரோம கத்தோலிக்க கிறிஸ்தவர்களை சேர்த்தல், மற்றும் ஞானஸ்நானம் ஆகியவை நடைபெற்றன. பரிசுத்த நற்கருணையில் பதினொரு பேர் கலந்து கொண்டனர். இதிலிருந்து அங்குள்ள சபை மிகவும் சிறியது என்று முடிவு செய்யலாம்; ஆனால் இங்கு நீண்ட காலமாக நிலவிய பஞ்சத்தின் காரணமாக இப் பகுதியைச் சேர்ந்த பல கிறிஸ்தவக் குடும்பங்கள் பிற பகுதிகளில், குறிப்பாக தஞ்சாவூரில், வாழச் சென்றுள்ளனர், . '

இவ்வாறு, தென்னிந்தியாவின் திருநெல்வேலி மற்றும் இராமநாதபுரம் பகுதிகளில் கிறிஸ்தவ சபைகளின் ஆரம்பகால வளர்ச்சி பல இன்னல்களுக்கு இடையே நடைபெற்றது. மிஷனரிகளான ஜெனிக்கே, குருவானவர் சத்தியநாதன், ரோட்லர் மற்றும் பலரின் அயராத உழைப்பும், ஊழிய அர்ப்பணிப்பும் இந்த வளர்ச்சிக்கு காரணமாக இருந்தது. அவர்கள் காய்ச்சல், பஞ்சம், பயணச் சிரமங்கள் போன்ற பல்வேறு இடர்களை எதிர்கொண்டனர். **'இந்த மண்ணில் கிறிஸ்து என்னும் சத்தியத்தின் விதை விதைக்கப்பட்டுவிட்டது; காலப்போக்கில் அது வேரூன்றி, பலனளிக்கும்'** என்ற விசுவாசத்துடன் அவர்கள் கிறிஸ்துவுக்காக பணியாற்றினர். பல கிறிஸ்துவ தேவாலயங்கள் கட்டப்பட்டன, பல திருச்சபைகள் உருவாக்கப்பட்டன, மக்கள் கிறிஸ்தவ விசுவாசிகளாக வளர்ந்தனர். தேவாலயக் கட்டிடங்கள் கற்களால் கட்டப்படலாம், ஆனால் திருச்சபை மக்களின் இதயங்களால் கட்டப்படுகிறது. நாம் கட்டும் ஒவ்வொரு தேவாலயமும் கர்த்தரின் வார்த்தை நிலைத்திருக்கும் இடமாக இருக்க வேண்டும். ஆண்டுகள் பல கடந்து சென்றாலும், இந்த ஆரம்பகால மிஷனரிகள், குருவானவர்கள் மற்றும் உபதேசியார்களின் அர்ப்பணிப்பும், செயல்களும் தென்னிந்திய திருச்சபையின் வரலாற்றில் மறக்க முடியாத அத்தியாயமாக நிலைத்து நிற்கின்றன.

இந்த மிஷனரிகளின் அழைப்பு மாறாதவரகிய கிறிஸ்துவை மையமாக வைத்து இருந்ததால் அவர்களின் அழைப்பும்இறுதிவரைமாறாததாகஇருந்தது.இவர்கள்அதிகமான உடல் பெலவீனங்களையும், மக்களுடைய பின்மாற்றத்தயும் பல இன்னல்களையும் கிறிஸ்து இயேசவுக்குள்ளாக சகித்துக் கொண்டதால் அவர்களுக்கான அறுவடை பெருமளவில் இருந்தது. கிறிஸ்து நமக்கு ஜீவனாக இருக்கும் போது சாவு நமக்கு ஆதாயமாகத்தான் இருக்கும் என்பதற்கு எவ்வித ஐயமும் இல்லை. 'ஆண்டவரின் பணிக்கென்று வரும் தடையை உடைக்க நாம் ஒரு அடி எடுத்து வைத்தோமானால்; அவர் பல அடிகளுக்கு மேலாக நமக்காக எழுந்து செயல் படுகிரவராய் இருப்பார்'. **'நாம் இன்று விதைக்கும் ஒரு சிறு விதை நாளை பெரிய அறுவடையாக மாறும், நம்முடைய இலக்கு கிறிஸ்துவாக இருக்கும்போது'.**

**தொடரும்...**

# பாரெங்கும் பேராலயங்கள் 4



சந்திரா மனோகரன், ஈரோடு.

டர்ஹாம் கதீட்ரல் (DURHAM CATHEDRAL)

### பாரம்பரியத் தொன்மையுடன் திகழும் டர்ஹாம் கத்தீட்ரல்

இங்கிலாந்து நாட்டின் பழமையான மற்றும் பரந்த தேவாலயங்களில் முக்கியமானது, நார்மன் ரோமான்ஸ்க் மற்றும் கோதிக் கலைச்சடங்குகளால் சிறப்பிக்கப்படும் டர்ஹாம் கத்தீட்ரல் ஆகும். ஆங்கிலிக்கன் கத்தீட்ரலான இத்தூய தேவாலயம், டர்ஹாம் மறைமாவட்டத்தின் மையக் கல்லூரியமாக விளங்குகிறது. இக்கத்தீட்ரல், டர்ஹாம் பிஷப்பின் இருக்கையாகவும் செயல்படுகிறது.

அற்புதமான கட்டிடக் கலைமைப்பைக் கொண்ட இக்கோவில், வேர் நதியின் குதிரை லாடம் போன்ற சுற்றுப்பரப்பில் பாறை மீது உயரமாக எழுந்து நிற்கிறது. கி.பி. 1093 முதல் கி.பி. 1133 வரையிலான சுமார் 40 ஆண்டுகளில் கட்டப்பட்ட இத்தெய்வீக கட்டிடம், தற்போது யுனெஸ்கோ பாரம்பரியச் சிறப்பிடம் என அங்கீகரிக்கப்பட்டுள்ளது. தேவாலயத்தின் நீளம் 143 மீட்டர், அகலம் 25 மீட்டர், உயரம் 22 மீட்டர், மேலும் மூன்று உயரமான கோபுரங்களைக் கொண்டுள்ளது.

இந்த கத்தீட்ரலில், புனித துறவி செயிண்ட் கத்பர்ட் அவர்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ளார். அவருடைய வரலாற்றாசிரியராகவும், ஆங்கில துறவியாகவும், எழுத்தாளராகவும் விளங்கிய வேனெரபில் பெடோ என்பவரும் இத்தேயிடத்திலேயே அடக்கம் செய்யப்பட்டுள்ளார். சமீபத்தில் பிரபலமான ஹாரி பாட்டர் திரைப்படங்களின் படப்பிடிப்பும் இங்கு நடத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இக்கத்தீட்ரலின் உருவாகும் வரலாறு தெய்வீகத் தொடர்களுடன் பின்னியிருப்பது முக்கியமானது. கி.பி. 635-இல், இங்கிலாந்தின் வடகிழக்கு கடற்கரையின் அருகிலுள்ள லிண்ட்ஸ் பார்ன் (Lindisfarne) எனப்படும் ஒரு சிறிய தீவு 'புனித தீவு' என அழைக்கப்பட்டு, ஒரு மடாலயமாக மாற்றப்பட்டது. அங்கு வாழ்ந்த துறவிகள் செயிண்ட் கத்பர்ட் பிஷப்பால் வழிநடத்தப்பட்டனர். கி.பி. 687ல் அவர் பரலோகமடைந்த பின், அவரது மறைவுக்குப் பிறகு, துறவிகள் அவருடைய புனித எச்சங்களை நினைவுச்சின்னங்களாக பாதுகாத்தனர்.

ஆனால் கி.பி. 875 இல் ஏற்பட்ட வைக்கிங் படையெடுப்பின்போது, துறவிகள் தங்கள் புனிதப் பொருட்களுடன் உடனடி தப்பிச் சென்றனர். அந்த நேரத்தில் செயிண்ட் கத்பர்ட் புனித எச்சங்களும் அவர்களுடன் இருந்தன. பல இடங்களில் இடம்பெயர்ந்த பின்பு, ஒரு கட்டத்தில் அவரது சவப்பெட்டி கனமடைந்தது. அது இயற்கையாக நகர முடியாதபடியானது. அதைக் கண்ட துறவிகள், 'இனி நான் இங்கு ஓய்வெடுக்கப் போகிறேன்' என செயிண்ட் கத்பர்ட் பிஷப்பின் நற்செய்தியாக கருதி, அந்த இடத்திலேயே ஒரு தேவாலயத்தை அமைத்தனர்.

இதே தேவாலயத்தைச் சுற்றிலும் காலப்போக்கில் ஒரு நகரம் வளர்ந்து தோன்றியது. அதுவே இன்றைய டர்ஹாம் நகரம். இவ்வாறு, ஆன்மீகக் கதைகளும் வரலாற்றுச் சாட்சியங்களும் பின்னிப் பிணைந்து அமைந்த டர்ஹாம் கத்தீட்ரல், இன்றைக்கு உலகின் முக்கியமான சுற்றுலா மற்றும் பக்தி மையமாக திகழ்கிறது.

தொடர் 8

# ஓடிப் போனவன்...



முனைவர்.ஜான்சி பால்ராஜ் நாவலாசிரியர், திருநெல்வேலி

கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள் மாத இதழில் இரண்டு ஆண்டுகளாக எழுதி புகழ்பெற்ற ஏமி கார்மைக்கேல் நாவலை எழுதிய நாவலாசிரியர்...

போகுமிடம் எதுவென்றே தெரியாமல், கிடைத்த வண்டிகளில் ஏறி ஊரைவிட்டு ஓடிப்போய் நான்கு ஆண்டுகளில் மீண்டும் அதே மண்ணிற்குப் புதியதொரு மனிதனாய் திரும்பி வருவான் என்று அவன் நினைத்தே பார்த்ததில்லை. இருபத்தொரு வயது நிரம்பிய இளம் வாலிபனான தாவீதுசுந்தரானந்தன், சுவார்ட்ஸ் ஐயர் கொடுத்தனுப்பிய கடிதத்தோடு பாளையங்கோட்டையில் சீர்திருத்தக் கிறித்தவ சபையின் குருவானவராக இருந்த சத்தியநாதன் ஐயரின் வீட்டிற்குச் சென்றான்.

சத்தியநாதன் தஞ்சைப்பகுதியில் பிறந்து வளர்ந்து சுவார்ட்சால் கிறித்தவத்தை ஏற்றவர். அவர் மூலமாகவே கிறித்தவ சமயப்பணியைச் செய்ய தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர். அங்குள்ள வெள்ளாளர் சமூகத்தைச் சார்ந்தவரான அவர் சாதி சமயப் பாகுபாடின்றி அனைவரிடமும் சரிசமமாக பழகும் பண்பாளர்.

பாளையங்கோட்டையில் கிளாரிந்தாள் என்ற பெண் மூலம் ஏற்படுத்தப்பட்ட திருச்சபையின் முதல் உபதேசியாரும் தொடர்ந்து அதன்முதல் இந்திய குருவானவராகவும் சுவார்ட்சால் நியமிக்கப்பட்டவர். அவரோடு வேளார் சமூகத்தினர்களான ஞானபிரகாசம், தேவசகாயம், மதுரநாயகம், ஆபிரகாம், வேதமுத்து போன்றோரும் இணைந்து சமயப்பணி செய்துவந்தனர்.

தாவீது சுந்தரானந்தன் சத்தியநாதனின் இல்லத்திற்கு வந்ததும் அவர் அவனை அன்போடு அணைத்து முத்தமிட்டு வரவேற்றார். தனது சொந்த மகனாகவே அவனைப் பார்த்தார். தாவீது நெகிழ்ந்துருகி நின்றான். தன்னை கட்டுப்படுத்திக் கொண்டு அவரை பணிவோடு வணங்கினான். சுவார்ட்ஸ் கொடுத்தனுப்பிய கடிதத்தை எடுத்து நீட்டினான். சத்தியநாதன் அதை வாங்கி வாசித்தார். 'மிக்க மகிழ்ச்சி தாவீது. உன்னைப்பற்றின முழு விபரத்தையும் சுவார்ட்ஸ் ஐயர் அவர்கள் தெளிவுபட எழுதியிருக்கிறார். எனக்கு கூடுதல் சந்தோஷம் என்னவென்றால் நீ நாடார் சமூகத்தினன் என்பதுதான். ஏனென்றால் இங்கு நாங்கள் எல்லோருமே நீ அறிந்திருக்குபடி நாடார்கள் அல்ல. ஆனால் இங்குள்ள நாடார் சமூகத்தில் அவர்களோடு பேசிப் பழகி கிறிஸ்துவை அவர்களுக்கு அறிவிப்பதற்கு எங்களைவிட அதே சமூகத்தில் உள்ள ஒருவர் வேண்டுமென்ற ஆவல் எனக்கு வெகுநாட்களாக இருந்துவந்தது. நான் இதற்காக தொடர்ந்து ஜெபித்து வந்தேன். அவ்வப்போது நாங்கள் அவர்களிடம் பேசி உரையாற்றினாலும் அவர்களது பழக்க வழக்கத்திற்கு ஏற்ப அவர்களோடு பழகி இயேசுவின் அன்பை போதிப்பதற்கு இயலாமல் போய்விடுகிறது. எங்களோடு உரையாடுவதில் அவர்களுக்கும் ஒருவித தயக்கம் தெரிகிறதாக உணர்கிறேன்.

ஆனால் அவர்களுக்கு இந்நாட்களில் கண்டிப்பாக சுவிசேஷம் தேவை. நான் அறிந்தளவில் நாடார் சமூகத்தினர் கடுமையான உழைப்பாளிகள். அவர்களால் எளிதில் எதையும் கற்றுக் கொள்ள முடியும். கல்வியும், நல்ல வழிநடத்தலும் இருந்தால் விரைவில் அவர்களை உயர்ந்த நிலைக்குக் கொண்டுவந்து விடலாம் என்று நம்புகிறேன். அதற்காகவே தேவன் உன்னை இங்கு அனுப்பியிருப்பதாக உணர்கிறேன்' என்றார் .

சத்தியநாதனின் தெளிவான பேச்சும், புரிதலுடலான அவரது அன்பும் அவனுக்கு தஞ்சை சுவார்ட்ஸையும் அங்குள்ள தனது நண்பர்களையும் நினைப்பூட்டியது. அவரிடமிருந்தஅதே பேச்சு வழக்கும், அதே மாறாத அன்பும், குணாதிசியங்களும் அவனை மகிழ்ச்சியாக்கியது. 'ஆம் ஐயா. நானும் அதையேதான் விரும்புகிறேன். எங்கள் சமூகத்தினர் இயேசுவை அறிய வேண்டும். அவர்கள் மட்டுமல்ல இந்த ஜில்லா முழுவதுமே இயேசுவை அறிந்து சாதி வேற்றுமை மறைய வேண்டும் ஐயா. எல்லோரும் கர்த்தருக்குள் ஒன்றே என்ற நிலை வரவேண்டும் என்பதே எனது ஆவல். இன்று நான் பாளையங்கோட்டைக்குள் வந்து நமது வீட்டு விலாசத்தை விசாரித்து கொண்டிருந்த போது மனத்தை வருத்தும் ஒரு விசயம் நடந்தது ஐயா. என்னால் எதுவும் செய்ய முடியவில்லை. ஜெபித்துக் கொண்டே வந்தேன். '

'அப்படியா. . . !?அப்படி என்னதான் நடந்தது தாவீது. . !?'

'அது. . . ஒன்றுமில்லை ஐயா நான் இந்த வீட்டிற்கான வழி தெரியாமல் ஒரு அக்ரகார தெருவிற்கு அருகில் சென்று

விட்டேன். அங்கு வெற்றிலை பாக்கு விற்பவன் ஒருவன் நின்றிருந்தான். அவனிடம் நான் வழி கேட்டேன். அந்த சமயம் அந்த வழியாகப் பேசிக் கொண்டே வந்த இரண்டுபேர் நின்று என்னை கவனித்தனர்.

என்னிடம் நீ எங்குள்ளவன் ? அப்படியும் இல்லாமல் இப்படியும் இல்லாமல் ஒரு விதமாக இருக்கேள்' என்று என்னை ஏளனமாகக் கேட்டுக் கொண்டே மேலும் கீழுமாக பார்த்தனர். நான் வெளியூர் என்று சொன்னேன். 'பரவாயில்லை எந்த ஊர் என்று சொல்' என்றார்கள். நான் தஞ்சாவூரிலிருந்து வருவதாக சொன்னேன். அதில் ஒருவன் என்னைப் பார்த்து 'பார்க்க படிச்சவன் மாதிரி இருக்கேள்' என்றான். 'ஆமாம்' என்றேன். 'என்ன சாதியான்?' என்றான். நான் 'எனக்கு சாதியெல்லாம் கிடையாது. நான் இயேசுவால் மனமாற்றமடைந்து அவருக்கு ஊழியம் செய்கிறேன்'. என்றேன். உடனே இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்து கலகலவென்று இளக்காரமாக சிரித்தனர். பிறகு 'அது எப்படி சாதி இல்லாமல் போகும்? சமயம் வேணுமுன்னா மாறிடலாம். எனக்குத் தெரிஞ்சு தஞ்சாவூர் பிள்ளைவாளா இருப்பான். அந்த சத்தியனாதன் பிள்ளைவாள் மாதிரியே பேசுரானே தெரியலையானோ . . . . சரிசரி வாரும் போவோம்' என்று கூறி சென்றனர் என்றான்.

சத்தியநாதன் அவனைப் பார்த்து, 'ஆமாம் தாவீது. இங்கு இப்படித்தான். ஆனால் இதிலிருந்து ஒன்றை தெரிந்து கொண்டிருக்க வேண்டும் நீ. உன் ஞானமான பேச்சும், நல்ல நடை உடையும் தான் அவர்களை நீ படித்தவன் என்பதைக் காட்டிற்று. அதைப் போன்றே இங்கு அவர்கள் கீழ்சாதிகளாக நினைக்கும் நாடார் சமூகம் உட்பட பள்ளர், பறையர் என்று அனைத்து தரப்பினரையும் முதலில் இயேசுவை அறியச் செய்ய வேண்டும். அத்தோடு நில்லாமல் அனைவரையும் கல்வியறிவைப் பெற வைக்க வேண்டும். இந்த இரண்டும் தான் சரிசமமான நிலைமைக்கு இந்த மக்களை உயர்த்தும். அதற்கான வெளிப்பாடாகத் தான் இன்று நீ சந்தித்த அந்த இரண்டு நபரும். நம் ஆண்டவராகிய கிறிஸ்து இயேசுதான் உனக்கிதை வெளிப்படுத்தியிருக்கிறார். தாமதியாமல் நீ உன் சமூகத்தாரை இயேசுவண்டை அழைத்து கல்வியளி. அதன்பிறகு அவர்கள் எல்லோருமே உன்னைக் காட்டிலும் உயர்ந்த இடத்திற்கு வருவார்கள் என்பதை நீயே காண்பாய்' என்றார்.

சத்தியநாதன் சொல்லச் சொல்ல உள்ளுக்குள் பூரித்தான் தாவீது. எல்லோரும் இயேசுவின் அன்பை அறிந்து கல்வி அறிவைப் பெற்று காணுமிடமெல்லாம் எந்தப் பாகுபாடும் இன்றி அன்பும் , பரிவும் , சாதி மத பேதமற்ற திருநெல்வேலி புதியதொரு நாடாக மிளிர்வதை தன் அகக்கண் மூலம் கண்டு முகம் மலர்ந்தான். ஆம் ஐயா. நிச்சயம் நடக்கும் என்று விசுவாசிக்கிறேன். கர்த்தர் என்னை இந்த இடத்திற்குக் கொண்டு வந்ததற்கு ஒரு நோக்கம் உண்டென்று உணர்கிறேன். ஆனாலும் இதற்கு நான் எள்ளளவேனும் தகுதியானவன் அல்ல. நான் எல்லோருடைய பாவங்களுக்காகவும் மரித்து உயிர்த்த நம் இயேசுவின் வழிநடத்துதலுக்காக காத்திருக்கிறேன் ஐயா. அதற்கான வாசலாகதான் நான் தங்களிடம் அவரால் அனுப்பப்பட்டிருப்பதாக உணர்கிறேன்'. என்றான். தாவீதின் பணிவும் இனிமையான பேச்சும் சத்தியநாதனை மிகவும் கவர்ந்தது.

'சரி தாவீது, முதலில் நான் உன்னை இங்கு நடைபெற்றுவரும் நமது பள்ளியில் உபாத்தியாராக நியமிக்க இருக்கிறேன். அதற்கான முழுத்தகுதியும் உன்னிடம் இருக்கக் காண்கிறேன்' என்றார்.

'ஐயா. . . நானா? உபாத்தியானா? நான் கேட்பது உண்மைதானா?' என்றவன் எழுந்து நின்று அவருக்கு முன்பு பணிவன்போடு தலைத் தாழ்த்தி நின்று வணங்கினான். சத்தியநாதன் அவனை அன்போடு அணைத்துக் கொண்டார்.

**தொடரும் ..**

**திருநெல்வேலி – தூத்துக்குடி மிஷனரி பணி பார்வை:**




சென்னையிலிருந்து இரண்டு நாள் பயணமாக, திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி பகுதிகளில் மிஷனரிகள் செய்த தொண்டுப் பணிகளை நேரில் பார்வையிட்டு அறிந்துகொள்ளும் நோக்குடன், அருள்திரு. ராஜா ஜெரால்டும், அவரின் மனைவி திருமதி ஷாலினி ஜெரால்டும் வருகை தந்தனர்.

இந்த பயணத்தின் போது, அவர்கள் திருச்சபையின் முக்கியமான முக்கிய இடங்களை பார்வையிட்டனர். கிளாரிந்தாள் ஆலயம், தூய திருத்துவ பேராலயம், சாரா டக்கர் மகளிர் கல்லூரி, ஜான்ஸ் கல்லூரி, மிலிட்டரி லைன் சர்ச், டோனாவூர் ஐக்கியம், இடையன்குடி, மெஞ்ஞானபுரம் ஆகியவற்றுடன், திருமறையூர் நாசரேத் பேராலயத்திற்குள் அமைந்துள்ள 'நாசரேத்தின் தந்தை' என்று அழைக்கப்படும் மிஷனரி ஆர்தர் மார்காஷியஸ் அவர்களின் நினைவிடத்தையும் சிறப்பாக பார்வையிட்டனர்.

அங்கு, மிஷனரி மார்காஷியஸ் அவர்கள் செய்த மாபெரும் பணிகளை நினைவு கூர்ந்து, அவரின் சமூக மற்றும் ஆன்மீக சேவையைப் பற்றிய ஆழ்ந்த சிந்தனையுடன் மரியாதை செலுத்தினர்.

இப்பெயருள்ள பயணம், நாசரேத் மற்றும் அதன் சுற்றியுள்ள கிராமங்களில் மிஷனரி பணியின் தாக்கத்தையும், அதன் தொடர்ச்சியாக ஏற்பட்ட ஆன்மீக விழிப்புணர்வையும் உணர்த்தும் வகையில், பயனுள்ளதொரு அனுபவமாக அமைந்தது.

# விவிலியம் ஓர் அறிமுகம்:



# ‘பைபிள்’

என்னும் ஆங்கில பதம் 'பிபிலியாஸ் என்னும் கிரேக்க சொல்லிலிருந்து உருவெடுத்தது. உருவெடுத்தது. 'பிபிலியாஸ்' (BIBLIAS) என்பதற்கு புத்தகம் மற்றும் பத்திரங்கள் என்ற பொருள் கொள்ளப்படுகின்றது. தமிழில் விவிலியம் என்ற சொல் 'பிபிலியாஸ்' என்னும் கிரேக்கச் சொல்லிருந்து மருவிவந்ததாகும். இது மனிதனின் ஆன்ம வழி காட்டியாகவும், வாழ்வின் அர்த்தத்தை விளக்குவதாகவும் அது காலாகாலமாக பயன்பட்டு வருகிறது. எனவே இது மனுக்குலத்தின் கருவூலமாகவும் போற்றப்படுகிறது. பழைய ஏற்பாட்டின் முதல் நூலான ஆதியாகமம் எழுதப்பெற்று சுமார் 1500 ஆண்டுகளுக்குப் பின்பு தான் புதிய ஏற்பாட்டின் கடைசி கடைசி நூலான 'வெளிப்படுத்தின விஷேசம் எழுதப்பட்டதாகும். பழைய ஏற்பாட்டின் பெரும்பாலான நூல்களின் முலமொழி எபிரேயம் ஆகும். எபிரேயமானது சமஸ்கிருதம், தமிழ் ஆகியவற்றுக்கு இணையான பழம்பெரும் மொழி. பழைய ஏற்பாட்டின் பிற்பகுதியில் உள்ள சில சொற்கள் எபிரேயத்தின் கிளைமொழியான அரமேயம் என்ற மொழியில் எழுதப்பட்டன. இயேசு நாதர் வாழ்ந்த காலத்தில் அரமேயம் வழக்கில் இருந்தது.

புதிய ஏற்பாட்டின் நூல்கள் அனைத்துமே கிரேக்க மொழியில் எழுதப்பட்டவை. பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என்னும் இருபெரும் பிரிவுகளாய், 66 புத்தகங்களை உடைய இந்த மறைநூல் எப்படி நம் கரங்களில் தவழ்ந்தது என வரலாற்று உண்மையுடன் ஆராய்வோம்.

**பைபிளின் வரலாறு:-**

முதலாம், இரண்டாம் நூற்றாண்டுகள்: சுவிஷேச புத்தகங்கள் மற்றும் நிருபங்கள் கைபிரதிகளாக எடுக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டது. குறிப்பாக அந்தியோகியாவில் (Antioch) இருந்த கிறிஸ்தவர்கள் இதை தீவிரமாக செய்து வந்தனர். சுமார் கி. பி. 400 களில் பழைய ஏற்பாட்டின் 39 புத்தகங்களும், புதிய ஏற்பாட்டின் 27 புத்தகங்களும் வேதாகமாக தொகுக்கப்பட்டது. இந்த காலத்தில் ரோமன் கத்தோலிக்க சபை மூலம் பைபிளாக வெளிவந்த The Vulgate பைபிளில் சில திருத்தங்களை தங்களுக்கு சாதகமாக செய்துகொண்டார்கள் என்ற புகார் இன்றுவரை இருக்கிறது. ஆறாம் நூற்றாண்டு முதல் 13 ஆம் நூற்றாண்டு வரை: லத்தீன் மொழி தவிர மற்ற மொழிகளில் பைபிள் உபயோக படுத்தப்படுவது போப்புகளால் தடை செய்யப்பட்டது. மற்ற மொழிகளில் இருந்த பைபிள்கள் பொதுவிடங்களில் வைத்து எரிக்கப்பட்டது. மீறி, இரகசியமாக வைத்திருந்தவர்கள் திருச்சபையின் துரோகிகள் என்று குற்ற சாட்டப்பட்டுக் கொல்லப்பட்டார்கள். இதைச் செய்தது திருச்சபைகளின் தாய் என்று தன்னை சொல்லிகொள்ளும் கத்தோலிக்க சபை தான் என்பதை நீங்களே வரலாற்றில் ஆய்வுசெய்து பாருங்கள். வால்டென்ஷியன்ஸ் (Waldensi-

ans 1170-1217 AD) என்ற இத்தாலியை சார்ந்த ஒரு கூட்டத்தினர் 'திருச்சபை சட்டங்கள் அல்ல, வேதமே விசுவாசத்திற்கும், வாழ்க்கைக்கும் இறுதியான அதிகாரமுடையதாக இருக்கவேண்டும் 'என்று சொல்லி சுவிசேஷம் அறிவித்து வந்தனர். மேலும் ஒவ்வொரு மனிதனுக்கும் அவனது தாய்மொழியில் வேதம் இருக்கவேண்டும் என்று சொல்லி பைபிள் மொழிபெயர்ப்புகளிலும் ஈடுபட்டு வந்தனர். போப்புகள் இவர்களை ஒடுக்கி. துன்புறுத்தி, அந்த இனத்தையே படையெடுப்புகள் (Crusades) மூலம் அழித்தனர்.

இதே காலக்கட்டத்தில் பிரான்ஸின் ஆல்ப மலையோரங்களில் வாழ்ந்த ஒரு குழுவினர் (அல்பிஜென்ஷஸ் - Albigenses) ரோமன் கத்தோலிக்க சபையின் சொருப வணக்கம், உத்தரிக்கும் ஸ்தலம், போப்புகளை வழிபடுவது போன்றவற்றை எதிர்த்து சபையை புதிய ஏற்பாட்டின் அடிப்படையில் வழிநடத்திச்செல்ல நிர்பந்தித்தனர். போப் மூன்றாம் இன்னொசெண்ட் கி. பி 1208-1209 களில் இவர்களுக்கு விரோதமாகப் போர் தொடுத்து ஏராளமான படுகொலைகளை செய்து அழித்தார்.

ஜான் விக்ளிஃப் (கி. பி 1329-1384) கத்தோலிக்க சபையின் திருவிருந்து பற்றிய தவறான போதனைகளையும் (Transubstantiation) போப்புகளின் அட்டூழியங்களையும் எதிர்த்து பிரச்சாரம் செய்ததுடன், பைபிளை 1380- 1384 களில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். இதற்காக இவர் பல உபத்திரவங்களை சந்தித்தார். இவர் தான் மறுமலர்ச்சியின் விடிவெள்ளி என்றழைக்கப்படுகிறார்.

ஜான் ஹஸ்: இவர் பரிசுத்த வேதத்தில் சொல்லப்படாத கத்தோலிக்க திருச்சபையின் உபதேசங்களையும், பழக்கவழக்கங்களையும் கண்டித்து புரட்சி செய்தார். இதனால் கி. பி 1415 ஆம் ஆண்டு கத்தோலிக்க சபை மன்றத்தின் ஆணையின்பேரில் உயிரோடு தீயிலிட்டு கொழுத்தப்பட்டார்.

ஜெரோம் சவனரோலா (கி. பி 1452-1498): இவரும் மறுமலர்ச்சிக் கொள்கைக்கு ஆதரவாக பிரச்சாரம் செய்ததால் அப்போதைய போப் இவரை மரத்தில் தூக்கிலிட்டுக் கொன்றார். பின்னர் இவரது சடலம் பிளாரன்ஸ் நகர மையத்தில் தீயிலிட்டுக் கொளுத்தப்பட்டது.

ஜெர்மனியின் ஜோகன்ஸ் குட்டன்பெர்க் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட அச்சு இயந்திரத்தால் முதல் அச்சடிக்கப்பட்ட புத்தகமாக பைபிள் வெளிவந்தது. அது Guternberg Bible என்றே அழைக்கப்பட்டது. சுவிசேஷம் பரவ வேண்டும். எல்லோர் கைகளிலும் பைபிள் என்ற சிறு புஸ்தகம் கிடைக்கவேண்டும் என்ற தேவனுடைய திட்டம் மிகச்சரியாக நிறைவேறியது (Between 6th and 7th trumpet). இதற்குபின்பு அச்சிடப்பட்ட பைபிள்கள், புத்தகங்கள், கைப்பிரதிகள் வெளியாவது எளிதாக மாறியது. மார்டின் லூதர் கி. பி 1517 ஆம் ஆண்டு பைபிளை ஜெர்மன் மொழியில் வெளியிட்டார். இதிலிருந்து தான் சுவிசேஷமும், மறுமலர்ச்சியும் உலகமெங்கும் வெடித்துப்பரவியது. வால்டென்ஸியன்கள் தங்கள் கைகளில் இருந்த ஒரிஜினல் வேதசுருள்களை கொண்டு மிஷனரிகளை பல இடங்களுக்கு இரகசியமாக அனுப்பி சுவிசேஷத்தை விதைத்தார்கள், அந்த விதை தான் புராட்டஸ்டண்ட் மறுமலர்ச்சிக்கு வித்திட்டது. அது ஜான் விக்ளிப் காலத்தில் வளர ஆரம்பித்தது; லூதரின் காலத்தில் பலன் கொடுத்தது. இன்று நாம் அதன் கனிகளை ருசித்துக்கொண்டிருக்கிறோம். வில்லியம் டிண்டேல் என்பவர் புதிய ஏற்பாட்டை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டதால் (Tyndale Bible-1526 பும்) கத்தோலிக்க சபையால் எரித்துக்கொல்லப்பட்டார்.

அவர் எரிந்து கொண்டிருக்கும்போது சொன்னது என்ன தெரியுமா? 'ஆண்டவரே இங்கிலாந்து மன்னனின் கண்களைத் திறந்தருளும்' இந்த இரத்த சாட்சியின் கூக்குரலைக் கேட்ட ஆண்டவர் இங்கிலாந்து மன்னர் எட்டாவது ஹென்றியின் கண்களைத் திறந்ததால் அவர் சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டு கி. பி 1540 ல் The Great Bible என்ற அங்கீகரிக்கப்பட்ட வேதாகம மொழிபெயர்ப்பை வெளியிட்டார். கி. பி. 1560-இல் முதல் முறையாக அதிக அளவில் அச்சடிக்கப்பட்ட, சாதாரண குடிமக்களுக்கும் கையில் கிடைத்த பைபிள் என்ற பெருமையை The Geneva Bible பெற்றது. இந்த வரிசையில் கி. பி 1604 ஆம் ஆண்டு இங்கிலாந்து மன்னன் ஜேம்ஸ் என்பவரது முயற்சியால் அமைக்கப்பட்ட விசுவாசமிக்க ஒரு குழுவினரால் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு வெளிவந்தது தான் இன்றுவரை உலக அளவில் அங்கீகாரம் பெற்று நம் கைகளில் தவழ்ந்துகொண்டிருக்கும். 'The King James Version' (KJV-1611).

இந்த காலக்கட்டத்தில் தான் புறஜாதி இந்தியர்களான நம்மையும், நம்மைப்போன்ற உலகின் பல புறஜாதியினரையும் கர்த்தர் நினைவு கூர்ந்ததினால், இரண்டு நூற்றாண்டுகளுக்கு இந்தியா உட்பட உலகின் 25% நிலப்பரப்பை இங்கிலாந்து வசம் ஒப்புக்கொடுத்தார். அவர்களின் காலணியாதிக்கத்தின் விளைவாகத் தான் மிஷனரிகள் நம் நாட்டிற்கும் வந்து சுவிசேஷம் அறிவித்து நம்மையும் கிறிஸ்துவுக்குள்ளாக்கினார்கள். இந்த திட்டத்திற்கு உதவிகரமாக இருந்ததே இந்த சிறு புஸ்தகமாக இருந்த பைபிள் தான்.


தமிழகத்திற்கு மிஷனரியாக வந்த பர்தொலோமேயு சீகன்பால் தரங்கம்பாடியில் ஊழியம் செய்ததுமில்லாமல் முதன்முதலில் தமிழில் சுவிசேஷ புத்தகங்களை மொழிபெயர்த்தார். இதே சமயம் 1800 களில் வில்லியம் கேரி பல இந்திய மொழிகளில் பைபிளை மொழிபெயர்த்தார்.

**நம் கைகளில் இருக்கும் வேதம்:**

இத்தனை தடைகளை தாண்டி நம் கைகளில் கிடைத்த பைபிளை உங்கள் கைகளில் சுமக்க வெட்கப்படுகிறீர்களா ? இருதயத்தில் பதிக்க தாமதப்படுத்துகிறீர்களா? அதன்படி நடக்க யோசிக்கிறீர்களா? நீங்களே உங்களை பரிசோதித்துக் கொள்ளுங்கள்.



ஜெ.ஜெனிஸ், கன்னியாகுமரி




Rev.G. P. இராஜா
CSI. பழனி நகர் குருசேகரம்

### பிறப்பு மற்றும் வளரும் ஆண்டுகள்

அருட்பணியாளர் சாண்ட்லர் தம்பதியினருக்கு 1884ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 14ம் தேதி செல்வி கெர்ட்ரூட் எதல் சாண்ட்லர் அம்மையார் (Gertrude Ethel Chandler) மகளாகப் பிறந்தார். இவருடன் பிறந்தவர்கள் மூன்று சகோதர்களும், ஒரு சகோதரியும் பிறந்தார்கள். இவர் பிறந்ததும் இவருடைய தாயார் இறந்துவிட்டார். இவருடைய தகப்பனார் அப்போது இறைப்பணி செய்த செல்வி. ஹென்ரீட்டா ரெண்டல் அவர்களை மறுமணம் செய்துக்கொண்டார். இந்த அம்மையார்தான் கெர்ட்ரூட் எதல் சாண்ட்லரை அக்கரையுடன் வளர்த்தார். ஆறு வயதானபோது தன்னுடைய சொந்த நாட்டுக்கு கல்வி கற்க அனுப்பப்பட்டார். அங்கு கல்வியை முடித்தப்பிறகு சிறுவருக்குக் கல்வி போதிக்கும் சிறப்பை பெற்று அங்கேயே சிலகாலம் பணியாற்றினார்.

### மிஷனரி அழைப்பு மற்றும் கல்விப்பணி

1892 ம் ஆண்டு தொடங்கப்பட்ட பாலர் வகுப்பு ஒன்று (Kindergarten) மதுரையிலுள்ள கேப்ரன் ஹால் பள்ளியில் ஆரம்பிக்கப்பட்டது. இந்த வகுப்பை சிறப்பாக நடத்த தகுதியுள்ள நபர் கிடைக்கவில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில் அமெரிக்க பெண்கள் ஐக்கியக்குழு பாலர் வகுப்பு பயிற்சி பெற்ற செல்வி. கெர்ட்ரூட் எதல் சாண்ட்லர் அவர்களை 1908ம் ஆண்டு மதுரையிலுள்ள கேப்ரன் ஹால் பள்ளிக்கு அனுப்பி வைத்தது. இப்பள்ளியில் பாடங்களுடன் இசையும் கற்றுக்கொடுக்கப்பட்டது. அம்மையார் அவர்கள் தன்னுடைய தந்தையைப்போல் தமிழ் மொழியில் பேசுவதும், எழுதுவதும் திறமைப்படைத்தவராகத் திகழ்ந்தார். 1916ஆம் ஆண்டு இப்பள்ளி அரசால் அங்கீகாரம் பெற்றது. அம்மையாருடைய திறமையை கண்டு சென்னையிலுள்ள தூய கிறிஸ்டோபர் ஆசிரியர் பயிற்சி கல்லூரியில் நிர்வாகக் குழு அங்கத்தினராக தேர்வு செய்து குழந்தை உளவியல் (Child Psychology) பாடத்தை கற்றுக்கொடுக்க நியமிக்கப்பட்டார். சில ஆண்டு இங்கு பணியாற்றியபின்பு மீண்டும் மதுரை மங்களபுரத்திற்கே வந்து பணியாற்றினார். 1931ஆம் ஆண்டு இரட்சண்யபுரத்திலுள்ள அப்பள்ளியின் பொறுப்பை பெற்றுக்கொண்டு வேதாகமப் பள்ளியை கண்காணிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். மங்களபுரத்தில் செல்வி. பெஸ்ஸி நாய்ஸ், மேரி நாய்ஸ் அவர்களுடன் இணைந்து பணியாற்றினார். ஏழை, எளியவர், பணக்காரர் என்று பாராமல் எல்லா மக்களுடன் சமமாகப் பழகி எல்லா கிராமங்களிலும் வேதாகமப் பெண்களுடன் இறைப்பணி செய்தார்.

1950 ஆம் ஆண்டுக்குபிறகு செல்வி. டெய்சி டேவிட் அம்மையாருடன் சேர்ந்து அருப்புக்கோட்டையில் தங்கி அதைச்சுற்றியுள்ள கிராமங்களிலும் வேதாகப் பெண்கள் மூலமாக நற்செய்தியையும், ஒளிச்சித்திரப் படம் காண்பித்து பிரசங்கம் செய்தார். ஏற்கனவே தன்னுடைய தந்தையார் பணி செய்த கொடைக்கானல் அதன் சுற்றியுள்ள பகுதியும், பெரியகுளம் அதன் சுற்றியுள்ள பகுதியும், வத்தலக்குண்டு அதன் சுற்றியுள்ள பகுதியில் அதிக காலம் பணி செய்ததினால். கெர்ட்ரூட் எதல் சாண்ட்லர் அடிக்கடி இப்பகுதிக்கு சென்றதினால் அங்குள்ள கிறிஸ்தவர்களை ஊக்குவித்தார். வேத சத்தியத்தை போதித்து வந்தார். இதனால் வத்தலக்குண்டு அருகேயுள்ள ஒரு

கிராம மக்கள் இந்த குடும்பத்தில் அதிக பாசம் கொண்டதினால் அந்த கிராமத்திற்கு சாண்டலர்புரம் என்று பெயர் சூட்டி இன்று வரை அந்த கிராமத்திற்கு சாண்டலர்புரம் என்று பெயர் அழைத்து வருகின்றார்கள். கொர்ட்ரூட் எதல் சாண்டலர் அவர்களுடைய தலைமையானாரொருவர் திரு. வில்லியம் சாண்டலர் அவர்கள் முதல் உலகப்போரில் கலந்து கொண்டு போராடி இறந்ததால் அவருடைய நினைவாக மதுரை கீழவாசல் ஆலயத்தில் ஒரு பெரிய ஜன்னல் அம்மையார் நினைவு சின்னமாக வைத்தார். அனைத்து கிராமங்களிலும் கீர்த்தனை பாடல்களை பாட வைப்பதில் மிக ஆர்வம் கொண்டவராக திகழ்ந்தார். குடும்பங்களில் மரித்தவர்களுடைய இல்லத்தில் ஆறுதலாகயிருப்பதுக்கு சில பாடல்களை பாடி அவர்களுடைய உள்ளம் ஆறுதல் பெற ஆறுதல் பாடல்களை பாட வைப்பதில் உற்சாக கொடுத்தார். கல்வி துறையில் பயனுள்ள பங்காக தொண்டாற்றினார். கிராமங்களிலும், நகர்புறங்களிலும் நற்செய்தியை எடுத்துச்செல்ல வேதாகமப் பெண்களுக்கு உற்ற துணையான தூணாக விளங்கினார். கொர்ட்ரூட் எதல் சாண்டலர் அம்மையார் அவர்கள் சிறுவர் சிங்காரவனம் என்னும் சிறுவருக்கான பன்னாட்டுச் சிறுர் கதைகளடங்கிய நூலையும் வேதாகமப் பெண்களுக்கு உதவியாக வேதாகம ஸ்திரிகளின் கைநூல் என்ற நூலையும் இயற்றினார்.

**மரணம்:**

1960 ஆம் ஆண்டு செல்வி. கொர்ட்ரூட் எதல் சாண்டலர் அவர்கள் கடைசி நாட்களில் அதிகம் நடக்கமுடியாமலிருந்து கர்த்தருடைய இளைப்பாறுதலுக்குள் சென்றார். தன்னுடைய கண்கள் உயிருடன் இருக்கும்போது கடவுளுக்காக பயன்பட்டது. அதைப்போல் தான் உயிருடன் இல்லாத காலங்களிலும் தன்னுடைய கண்கள் கடவுளுக்காக பயன்பட வேண்டும் என்ற தூர தரிசனத்துடன் தன்னுடைய இரண்டு கண்களையும் தானமாகயிருக்க உயில் எழுதி வைத்தார். கொர்ட்ரூட் எதல் சாண்டலர் அவர்களுடைய முகத்தில் எப்போதும் புன்னகையிருக்கும், அவர் சாதி, மதம், சமுதாயம், கல்வி போன்ற காரியங்களில் முற்போக்கு சிந்தனையுடன் காணப்பட்டார். அவர் மரித்தும் இன்னும் பேசிக்கொண்டியிருக்கிறார். செல்வி. கொர்ட்ரூட் எதல் சாண்டலா. அவர்களில் கடைசி வார்த்தை என்னைப்போல் நீங்களும் வாழ்ந்து பிறருக்கு பயன்படுங்கள். மரித்தும் பயன்படுங்கள் என்னும் உயரிய ஆணையை இட்டுச் சென்றுள்ளார். அநேக சிறுவர்களுக்கு வழியாகவும், ஒளியாகவும் தன்னுடைய வாழ்வு காணப்பட்டது என்று சொன்னால் மிகையாகாது. இவரைப்போல் நாமும் மற்றவர்களுக்கு வழிகாட்டும் ஒளியாக இருக்க இயேசு நம்மை அழைக்கின்றார்.

அவரின் கடைசி வார்த்தைகள் "என்னைப்போல் நீங்களும் வாழ்ந்து பிறருக்கு பயன்படுங்கள். மரித்தும் பயன்படுங்கள்" என்றென்றும் ஒலி போலும். கொர்ட்ரூட் எதல் சாண்டலர் அம்மையார் நம் வாழ்வுக்கே ஒரு சவாலாகவும், அழைப்பாகவும் நிற்கிறார்.


கிறிஸ்தவ
வரலாற்றுச் சுவடுகள்

மாத ஆய்விதழ் சந்தா விபரம்

| சந்தா விபரம் | உள்நாடு |
|---|---|
| தனிப்பிரதி | ₹ 60 + நன்கொடை |
| ஆண்டு சந்தா | ₹ 600 + நன்கொடை |
| ஐந்து ஆண்டு சந்தா | ₹ 3000 + நன்கொடை |

வங்கி விபரம்

Name: CHRISTAVA VARALATRU SUVADUGAL

A/c Number : 1748 020000 5614

Bank name : Federal Bank

IFSC code: FDRL0001748

"கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்"
மாத ஆய்விதழை நீங்கள்
தொடர்ந்து பெற்றுக் கொள்ள
G-Pay மூலம் நன்கொடை செலுத்த
90420 15221 என்ற எண்ணுக்கு செலுத்தவும்
காசோலை மற்றும் வரைவோலை செலுத்த
"கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்"
( CHRISTAVA VARALATRU SUVADUGAL )
என்ற பெயரில் எடுக்கவும்

கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்,
கதவு எண் 2-2-3(4), வடக்குத்தெரு,
பங்களாச் சுரண்டை-627859,
தென்காசி மாவட்டம் (தமிழ்நாடு)
04633 290401, 91767 80001

christianhistoricalsociety.in
christianhistorical@gmail.com

# சங்க பணிகளுக்காக ஜெபித்துக்கொள்ளுங்கள்

**கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கத்தின் அன்பின் வாழ்த்துக்கள்.**

பூர்வ நாட்களை நினை; தலைமுறை தலைமுறையாய்ச் சென்ற வருஷங்களைச் கவனித்துப்பார்; உன் தகப்பனைக் கேள், அவன் உனக்கு அறிவிப்பான், உன் மூப்பர்களைக் கேள், அவர்கள் உனக்குச் சொல்லுவார்கள். உபாகமம் 32.7

தமிழகக் கிறிஸ்தவ திருச்சபை உருவாகி சுமார் இரண்டரை நூற்றாண்டுகளாகின்றன. பராபரனின் பெரிதான கிருபையினால் இன்று திருமண்டலங்களாகவும், பல நூறு திருச்சபைகளாகவும் பெருகி வந்து கொண்டு இருக்கின்றது. பராபரனுக்கு ஸ்தோத்திரம். திருச்சபை சரித்திரத்தை அறிய வேண்டிய அவாவும் மக்கள் மனதில் அதிகரித்துக்கொண்டே இருக்கின்றது. இந்நிலையில் **'யார் நமது காரியமாய் போவான்,' இதோ அடியேன் இருக்கின்றேன், என்னை அனுப்பும்'** என்று ஏசாயா தீர்க்கன் முன் வந்தது போல வரலாற்றை மீள் பதிப்பு செய்யவும், வரலாற்று பணிகளை கள ஆய்வுப் மேற்கொள்ளவும், நின்றுபோன வரலாற்று **'தொடரோட்டத்தை தொடரவும்'** கடவுளால் தெரிந்துகொள்ளப்பட்ட இயக்கமே **' கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்'**

**கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்** தமிழ் கிறிஸ்தவ வரலாற்று ஆய்வாளர்கள் பலரின் அரும்பெரும் முயற்சியினால் தொடங்கப்பட்டது. நம்முடைய வரலாற்றுச் சங்கத்தின் தரிசனத்தில், இறையியல் கல்லூரி மாணவர்கள் பலர் தன்னார்வத்தோடு தங்களையும் இணைத்து செயல்பட்டு வருகிறார்கள். மேலும் தமிழ்நாடு முழுவதும் உள்ள பல வரலாற்று ஆய்வாளர்களுடன் கைகோர்த்து இப்பணியைச் செய்து வருகின்றோம்.

வரலாற்றுச் சங்கமானது கடந்த ஐந்து ஆண்டுகளாக உங்களுடைய ஜெபத்தினாலும் பேராதரவினாலும், மிகச்சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. நமது பத்து அம்ச திட்டங்களில் மாத ஆய்விதழ், பழைய புத்தகங்கள் சேகரித்தல் மற்றும் டிஜிட்டல் செய்யும் பணி, புத்தக மறுப்பதிப்பு பணிகள், நூலகப் பணிகள், மிஷன் சுற்றுப்பயணம், புத்தக வனம் இணைய செயலி, ஆவணப்படம் தயாரித்தல், மிஷன் அருங்காட்சியகம், ஆய்வுக் கருத்தரங்கம் போன்ற பணிகளை கடந்த ஆண்டுகளில் செய்து வருகின்றதை நீங்கள் அறிந்ததே.

இந்த ஆண்டிலும் வரும் ஆண்டுகளிலும் நமது இலக்குகளை அதிகப்படுத்தி இருக்கின்றோம். குறிப்பாக **புத்தக மறுப்பதிப்பு, நூலக கட்டிட பணிகள், மிஷன் அருங்காட்சியகம்** மேற்கண்ட பணிகளை செய்து வருகின்றோம். இப்பணிகளில் நீங்கள் குடும்பமாகவோ, இயக்கமாகவோ அல்லது தனி நபராகவோ இணைந்து செயல்படவும் பங்கு பெறவும் அன்புடன் அழைக்கின்றோம்.

**நம் சங்கத்தின் பத்து அம்ச செயல்திட்டத்தை நினைவுபடுத்துகின்றோம்:-**

தமிழ் கிறிஸ்தவ வரலாற்றில் நீண்ட இடைவெளிக்கு பின்பு மீண்டும் ஒரு வரலாறு படைத்துக் கொண்டு இருக்கும் மாத ஆய்விதழ் தான் **'கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்'**. கடந்த 2020ம் ஆண்டு ஜீன் மாதம் முதல் ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு தலைப்பைக் கொண்டு பல்வேறு அரிய ஆய்வுக் கட்டுரைகளோடு மிக சிறப்பாக வெளி வந்து கொண்டிருக்கிறது. **மறைக்கப்பட்ட, மறந்த, மறைந்த** மிஷனெரிகள் மற்றும் திருச்சபை வரலாறுகள், கள ஆய்வுகள், பல்வேறு அரிய வரலாற்று பொக்கிஷங்களுடன் தமிழகம் முழுவதும் தொடர்ந்து 1780 க்கு மேற்பட்ட வாசகர்களுடன் வந்து கொண்டு இருக்கின்றது.

- காலவோட்டத்தில் அறுபட்டுக்கிடந்த இசைத் தமிழ் கண்ணிகளைத் தற்கால இசைத் தமிழ் உலகுக்குக் கோர்த்துக் கொடுத்த மாபெரும் இசைத் தமிழ் அறிஞர் தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் அவருடைய அளப்பரிய செயல்களை நினைவுகூறும் வகையில் **ஆபிரகாம் பண்டிதர் நினைவு மின்னனு ஆராய்ச்சி நூலகம்** நம்முடைய சங்கத்தின் சார்பில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆபிரகாம் பண்டிதர் நினைவு ஆராய்ச்சி நூலகமானது தமிழ் கிறிஸ்தவ மின்னனு நூலகத்தில் **முதல் நூலகம்** என்ற சிறப்பைப் பெற்றது. இந்த நூலகமானது தமிழ் கிறிஸ்தவ வரலாற்று ஆய்வாளர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும், தமிழ் கிறிஸ்தவ ஆராய்ச்சி மாணவர்களுக்கும் பயன்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. தமிழ் கிறிஸ்தவ வரலாற்றில் ஒரு புதிய மைல் கல்லாகவும் அமையும். மேலும் அநேக புதிய தமிழ் கிறிஸ்தவ எழுத்தாளர்களை உருவாக்கவும், ஆராய்ச்சியாளர்களை உருவாக்கவும் இது உதவியாக இருக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.
- வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த, மறுபதிப்பு செய்து வெளியிடப்படாத கிறிஸ்தவ மிஷனெரிகளின் வாழ்க்கை வரலாறு புத்தகங்களை மறுபதிப்பு செய்து வருகின்றோம். குறிப்பாக நெல்லை திருமண்டல வரலாற்று அறிஞர் பேராசிரியர் அருள்திரு **தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர்** அவர்களுடைய படைப்புகளை மறுபதிப்பு செய்து இன்றைய தலைமுறைகளுக்கு கொண்டு செல்லவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றோம். குறிப்பாக கடந்த ஆண்டு பேராசிரியர் அருள்திரு தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர் அவர்களின் வரலாற்று சிறப்புமிக்க புத்தகம் அனைத்தையும் மறுபதிப்பு செய்து வருகின்றோம்.

- நம்முடைய வரலாற்று சங்கமும் கிறிஸ்தவ ஆய்வு மற்றும் ஆவணப்படுத்து மையமும் இணைந்து **'புத்தக வனம்'** செயலி செயல்பட்டுக் கொண்டு இருக்கின்றது. இந்த செயலி தமிழகத்தில் முதல் முறையாக டிஜிட்டல் முறையில் கையடக்க வடிவில் புத்தகமாக முழு நூலகமாக உங்கள் கைகளில் கொடுத்துள்ளோம். இன்னும் பல ஆயிரம் புத்தகங்களை பதிவேற்றும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. மேலும் பேராசிரியர் அருள்திரு தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர் பெயரிலேயே **நினைவு புத்தக அங்காடி** ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- தமிழக வரலாற்றில் கிறிஸ்தவ மிஷனெரிகளுடைய பங்கு குறிப்பிடத்தக்கது. அந்த மிஷனெரிகள் பணி செய்த இடங்கள், அவர்களுடைய நினைவிடங்கள், தங்கியிருந்த இல்லங்கள், கல்லறைகள், வரலாற்று சிறப்புமிக்க ஆலயங்கள், இரத்த சாட்சிகளாக மரித்த மிஷனெரிகள் பணி செய்த மற்றும் தங்களை இரத்த சாட்சியாக ஒப்புக்கொடுத்த இடங்களை தெளிவான முறையில் பார்வையிடவும், வெளியிடங்களிலிருந்து வரும் மக்களின் வசதிக்காகவும் **Mission Tourist Map** என்று செயலி உருவாக்கி அதன் மூலம் அவர்கள் தங்குமிடங்கள், வழித்தடங்கள் அடங்கிய மின்னியல் கையேடு அமைப்பது.
- வரலாற்றின் பக்கங்களில் மறைந்து கிடக்கும் கீர்த்தனை கவிஞர்கள், உபதேசிமார்கள், முன்னாள் குருமார்களுடைய வரலாற்று பொக்கிஷங்களை சேகரித்து வருகிறோம். மேலும் அவர்களுடைய வரலாற்றுத் தகவல்கள், அவர்களால் உருவாக்கப்பட்ட திருச்சபைகள், கிறிஸ்தவ பாடல்கள் உருவாக்கம் பெற்ற வரலாறுகள், பாடல்களின் வரலாறுகளையும் சேகரித்து அதை மின்னியல் முறைக்கு மாற்றும் பணிகளையும் செய்து கொண்டு இருக்கின்றோம்.
- தமிழ் கிறிஸ்தவ பழைய புத்தகங்களை சேகரித்து மின்னியல் முறையில் ஆபிரகாம் பண்டிதர் நினைவு ஆராய்ச்சி நூலகத்திலும், பேராசிரியர் **அருள்திரு தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர் நினைவு புத்தக அங்காடி**யிலும் பதிவேற்றம் செய்வதுடன் புத்தகங்களை தமிழ் கிறிஸ்தவ வரலாற்று ஆய்வாளர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும், ஆராய்ச்சி மாணவர்களுக்கும் பயன்படும் விதமாக ஒரு சிறந்த ஆய்வு நூலகம் அமைக்கவும் முயற்சிகளும் மேற்கொண்டு வருகிறோம்.
- மிஷனெரிகளின் வாழ்க்கை வரலாற்று சம்பவங்களை அடிப்படையாக கொண்டு ஆவணப்படங்களை வெளியிடுவதற்கான முயற்சிகள் செய்து கொண்டு இருக்கிறோம். கர்த்தருக்கு சித்தமானால், வருகிற ஆண்டு **கிளாரிந்தா, ஏமி கார்மைக்கேல்** மிஷனெரிகளின் வரலாற்றை ஆவணப்படமாக்க திட்டமிட்டிருக்கிறோம்.
- தங்களுடைய வசதியான வாழ்வை தியாகம் செய்து நம் நாட்டிற்கு வந்து கோதுமை மணிகளாய் விதைக்கப்பட்ட மிஷனெரிகள் மற்றும் தன் சொந்த மக்களுக்காக தங்களையே அர்ப்பணித்த நம் இந்திய மிஷனெரிகளின் நினைவிடங்கள் மற்றும் கல்லறைகளை கண்டறிவதுடன் திருச்சபையுடன் இணைந்து பராமரித்து அவர்களுடைய தியாகங்களை குறித்த விழிப்புணர்வை திருச்சபை மக்களுக்கு ஏற்படுத்த பணியாற்றி வருகிறோம்.
- வரலாற்றுச் சங்கம் சார்பில் மிஷனெரிகள் பயன்படுத்திய கலை பொருட்கள் மற்றும் புத்தகங்கள், பைபிள், சேகரித்து வரலாற்று **அருங்காட்சியகம்** அமைக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறோம். மிஷனெரிகள் பயன்படுத்திய பொருட்களை சேகரித்து வருகிறோம்.
- கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம் மற்றும் மேய்ப்பரின் பயிலகம் சார்பாக கடந்த இரண்டு மாதமாக இணையதள **சீர்திருத்த தமிழ் திருச்சபையின் ஆரம்பங்கள்** என்ற தலைப்பில் ஒவ்வொரு மாதமும் இரண்டாவது செவ்வாய்கிழமைகளில் இரவு ஏழு முப்பது மணிக்கு நடைபெற்று வருகின்றன.

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, கடந்த 2017ம் ஆண்டு அற்பமாக ஆரம்பிக்கப்பட்ட நம்முடைய திருநெல்வேலி **கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்** இது வரையிலும் பல்வேறு தடைகளையும், நெருக்கடிகளையும் கடந்து வந்திருக்கிறது. வரலாற்று ஆய்வாளர்கள், ஆசிரியர்கள், வாசகர்கள், நண்பர்கள், நலன் விரும்பிகள் ஆகியோருடைய இடைவிடா ஜெபத்தாலும், ஆதரவாலும், உதவியாலும் நம் கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. மேலும் நம்முடைய மாதாந்திர ஆய்விதழும் தடைகளின்றி வெளி வருகிறது. நம்முடைய கிறிஸ்தவ வரலாற்றுச் சங்க செயல்பாடுகள் சிறப்பாக அமைய ஜெபத்தாலும், உடலுழைப்பாலும், பொருளாதார வழியிலும் உதவி வரும் அத்துணை நல்லுள்ளங்களுக்கும் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம். தொடர்ந்து நாம் செயல்பட வேண்டிய தளங்கள் அநேகமுண்டு. இணைந்து செயல்பட அன்புடன் அழைக்கிறோம். வரலாற்றுச் சங்கத்தின் ஓர் அங்கமாக வரலாற்றை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லும் கருவியாவோம். சர்வ வல்லமை கொண்ட ஆண்டவரின் ஆயுதமாவோம்.

christianhistoricalsociety.in/

# சிவகாசி வரலாற்றுத் தேடல்
# பயணத்தில் கண்ட சத்தியத்தின் சாட்சிகள்



ஜே.பர்னபாஸ், சேலம் வரலாற்றுச் சங்கம்

**வரலாற்றுத் தேடல் பயணம்:**

இந்த 2025ஆம் ஆண்டு மார்ச் மாதம் 8 ஆம் நாள், நானும் நமது சேலம் வரலாற்றுச் சங்கத்தின் இணை செயலர் பேராசிரியர் டாக்டர் S. V. கோவிந்தராஜு அவர்களும், துவங்கிய இந்த பயணம் அடிப்படையில் ஒரு திருமணம் சம்பந்தமானது. ஆனாலும் போகிற இடங்களிலெல்லாம் ஒரு வரலாற்றுத் தேடலுடன் சுற்றிப் பார்த்தல் இந்த பயணத்தின் நோக்கத்தை பாதிக்காமல் எங்களால் மேற்கொள்ளப்பட்டது.

**கண்டேன் திருப்பரங்குன்றம் :**

8ஆம் தேதி மாலை மதுரை திருமங்கலத்தில் உள்ள கப்பலூரில் இரவு தங்கி, அடுத்த நாள் 09-03-2025 ஞாயிறு காலை, முருகனின் முதல்படை வீடான திருப்பரங்குன்றம் திருக்கோயிலில் திருமண நிகழ்வில் பங்கேற்றோம். மதுரையின் இந்தப் பகுதியைத் தமிழ்நாட்டின் அயோத்தி என்று சொல்லிக்கொண்டு செயல்பட்ட இந்துத்துவ மதவாதிகளால், சமீபத்தில் சர்ச்சைக்கும், திடீர் பரபரப்பிற்கும் உள்ளான இந்தப் பகுதியின் மலையடிவாரத்தில் உள்ள சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலை திருமண வைபவத்திற்கு பிறகு அன்று நாங்கள் சுற்றிப் பார்த்தோம். அங்கே பிரமாதமான சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய பிரமாண்டமான கல்தூண்கள் என் கருத்தைக் கவர்ந்தன. இராட்சஷன் கோலியாத்தைப் போன்ற கிரேன்களும், நவீன தொழிநுட்பங்களும், இல்லாத அந்த காலத்தே, இந்த இப்படியான பிரமாண்டத் தூண்களை எப்படி தூக்கி நிறுத்தினார்களோ? என்ற கேள்வியும், வியப்பும் என் மனதில் தோன்றி நிலைத்தது. ஆனாலும், இந்த பிரமாண்டங்களையும், பிரமாதமான சிற்ப வேலைப்பாடுகளையும், யாரும் அங்கே கண்டு, இரசிக்கவில்லையே என்பதையும் நான் கவனித்தேன். எல்லாம் இங்கே வியாபாரங்களின் மயமே! பற்பல விசித்திரமான சிற்பத் தூண்களை யெல்லாம் மறைத்துக் கொண்ட வியாபாரக் கடைகள் ! சாமியைத் தரிசித்தால் போதும் என்ற பக்தனின் மனநிலை! இதுவும் எல்லாமும் ஒரு மாயையே என்று நினைத்தேன்.

**சிவகாசி – CSI ராக்லேண்ட் நினைவாலயம் :**

திருமண வரவேற்பில் பங்கேற்பதற்காக ஞாயிறு மதியம் சிவகாசியை நோக்கிப் பயணப்பட்டோம். ஊருக்குள் நுழைந்து வரும்போதே, உயர்ந்த மணிகோபுரத்துடன் CSI ராக்லேண்ட் நினைவாலயம் (CSI Ragland Memorial Church) எங்களை வரவேற்றது.

**ராமுன்னி மேனன் பூங்கா [Ramunni Menon Park]:**

ஆலயத்தின் அருகே வாகனத்தை நிறுத்தியபோது, அருகிலேயே ஒரு பராமரிக்கப்படாத பூங்கா ஒன்றும் இருப்பதைக் கண்டோம். 1944 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26ஆம் நாள் (26-04-1944), சிவகாசி நகராட்சியின் ராமுன்னி மேனன் பூங்கா என்ற இந்த பூங்கா (Ramunni Menon Park), அன்றைய சிவகாசி Revenue Divisional Officer ஜனாப் F. S. ஹமீத் சாகிப் பகதூர் அவர்களால் திறக்கப்பட்டது என்பதை, பூங்கா சுவற்றோரம் பதிக்கப்பட்டிருந்த சாசன கல்வெட்டு சொல்லிக் கொண்டிருக்கிறது. இந்த ஏப்ரல் 26ஆம் நாளில் இந்த பூங்கா தனது இருப்பின் 81ஆவது ஆண்டை நிறைவு செய்கிறது.

**நூற்றாண்டை நிறைவு செய்த தேவாலயம்:**




பின்னர் உயர்ந்த மணிகோபுரத்துடன் கூடிய ராக்லேண்ட் நினைவாலயத்திற்குள் எங்கள் பாதங்கள் சென்று நின்றது. ஆலயத்தின் முன்பக்கத்தில் பதிக்கப்பட்டிருந்த சாசன கல்வெட்டுகள் அனைத்தையும் படித்து, ஒளிப்படம் எடுத்துக் கொண்டோம்.

1917ஆம் ஆண்டு இந்த இடத்திலே சங்கை T. G. ராக்லேண்ட் ஐயர் பெயரில் ஆலயம் கட்டுவதற்காக, அஸ்திபாரக்கல் அன்றைய திருநெல்வேலி பேராயர் மகாகனம் பிஷப் வாலர் அவர்களால் போடப்பட்டது. பின்னர் 8ஆண்டுகள் கழித்து 29-12-1925 அன்று, இந்த இடத்தில் சிவகாசி அப்போஸ்தலன் சங்கை T. G. ராக்லேண்ட் ஐயர் பெயரில் நினைவாலயமாக எழுப்பப்பட்ட Ragland Memorial Church என்ற இந்த ஆலயம் அன்றைய பேராயர் மகாகனம் N. H. டப்ஸ் அவர்களால் (The Rt. Rev. N. H. Tubbs), மங்கலப் படைப்பு செய்து திறக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து இந்த ஆலயத்தின் மணிகோபுரத்திற்கான பணிகள் 13ஆண்டுகளுக்குப் பின்பு

26-09-1938 அன்று, பேராயர் மகாகனம் பேக்கன்ஹாம் வால்ஸ் அவர்களால் (The Rt. Rev. Bakenham Walsh) இறையரசின் மகிமைக்கென்று அர்ப்பணிக்கப்பட்டது.

இந்த ஆலயத்தின் பால்கனி (Balcony) சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளதை சென்று பார்த்தோம். 1974ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் நாள் ஆலயத்தின் பால்கனிப் பணிகளின் துவக்கமாக அன்றைய மதுரை- இராமநாதபுரம் பேராயர் மகாகனம் ஜார்ஜ் தேவதாஸ் அவர்களால் (The Rt. Rev. George Devadass- Bishop, Madurai-Ramnad Diocese) அடிக்கல் நாட்டப்பட்டதைக் குறிக்கும் கல்வெட்டையும் கண்டோம். ஆலயத்தின் கூரையின் உட்பக்கம் தேக்கு மரப் பலகைகளால் மூடப்பட்டுள்ளது. இதுபோன்ற. புதுமையான அமைப்பு கல்கத்தாவில் ஒரு தேவாலயத்தில் இருப்பதாகவும், அதே அமைப்பில் இந்த ஆலயமும் கட்டப்பட்டதாக ஆலய அங்கத்தினர் திரு. சி. சாம்சன் தெரிவித்தார்.

நூற்றாண்டை நிறைவு செய்த (1925-2025) இந்த ஆலயத்தின் நூற்றாண்டு விழா பணிகளுக்காக, மணிகோபுரமும் (Belfry), பாதிரிமார்கள் உடுப்பு மாற்றும் அறையும் ( Vestry), மற்றும் சில பணிகளோடு சேர்த்து 07-04-2024 அன்று புதுப்பிக்கப்பட்டது.

ஆலயத்தின் பிரசங்க பீடம் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது. அதன் முகப்பில் ஒரு Brass plate பதிக்கப்பட்டுள்ளது. அதில் எழுதப்பட்டிருக்கும் வாசகத்தை இங்கே தருகிறேன் : 'சிவகாசியிலே கிறிஸ்துவுக்கு ஆதிதாசரும், சுவிசேஷப் பிரசங்கியுமானவரும், 1855ம் வருஷம் முதன்முதல் அங்கே ஓர் ஆலயங்கட்டுவித்தவருமாகிய வேதபோதகரை ஞாபகப்படுத்துதற்காக. . . ' என்பதே. இது சங்கை T. G. ராக்லேண்ட் ஐயரின் ஒப்பற்ற தியாகத்தை நினைவில் கொள்ளவேண்டும் என்பதற்காகவே பொறிக்கப்பட்டுள்ளதாகவே காண்கிறேன். ஆலயம் கட்டிமுடிக்கப்பட்டபோது இதனை பிரசங்க பீடத்தில் பதித்தவர்களின் வரலாற்றுச் சிந்தனையைப் போற்றுகிறேன்.

ஆலயத்திலே வேதவாசிப்பு மேடை (Lecturn), அதன்மேல் வாசிப்பதற்காக வைக்கப்பட்ட மிகவும் பெரிய அளவிலான பைபிள், மரத்தாலான காணிக்கைப் பெட்டி, ஞானஸ்நானத் தொட்டி, இவைகலெல்லாம் பழமையான அரும்பொருட்கள். சிவகாசியிலேயும் அதன் சுற்று வட்டாரங்களிலும் பல திருச்சபைகள் உருவாகக் காரணமாக இருந்த இந்த பகுதிகளின் முன்னோடி திருத்தொண்டர் சங்கை T. G. ராக்லேண்ட் ஐயர் அவர்களின் வாழ்க்கை வரலாற்று நூலை நாளை தருவதாகவும், ஐயரின் சமாதிக்கும் அழைத்துச் செல்வதாகவும் எங்களிடம் உறுதியளித்த திரு. சி. சாம்சன் மற்றும் நண்பர்களுக்கும், ஆலயத்தில் இருந்த பெரியவர்களுக்கும், நன்றிகூறி அவ்விடத்திலிருந்து எங்கள் பயணத்தைத் தொடர்ந்தோம்.

**சாட்சியாபுரம் தூய மாற்கு ஆலயம் :**

இந்த குடியிருப்பின் பெயர்ப் பலகையைப் பார்த்த உடன், எனது நினைவிற்கு தஞ்சை சுவிசேட கவிராயர் சங்கை வேதநாயகம் சாஸ்திரியாரின் 'சாலேமின் ராசா சங்கையின் ராசா சுவாமி வாருமேன் ' என்ற கீர்த்தனைப் பாடலின் வரிகள் நினைவிற்கு வந்தன.

'சாட்சியாக சுபவிசேஷம் தாரணி மேவுதே! - உந்தன் சாட்சிகளுடைய ரத்தங்கள் எல்லாம் தாவிக் கூவுதே!' என்ற வரிகள் இந்த சிவகாசி பகுதிகளுக்காகவே, இங்கு தொண்டாற்றிய திருத்தொண்டர்களின் ரத்தங்களின் சாட்சிகளுக்காகவே, எழுதப்பட்டதாகவே எனக்குத் தோன்றுகிறது..

விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், சிவகாசி நகரின் மேற்கே, சிவகாசி நகரிலிருந்து மூன்று கீலோமீட்டர் தொலைவில், திருவில்லிப்புத்தூர் பிரதான சாலையில் அமைந்துள்ளதே சாட்சியாபுரம் (Satchiyapuram) என்ற குடியிருப்புப் பகுதி. திருச்சபை திருத்தொண்டர்கள் சங்கத்தைச் சேர்ந்த திருத்தொண்டர்களின் முயற்சிகளால் உருவான ஒரு கிறிஸ்தவ குடியிருப்புப் பகுதி இது. சங்கை T. G. ராக்லேண்ட் ஐயர் (1815-1858), சங்கை சார்லஸ் எவரி ஐயர் (Rev. Charles Avery), சங்கை J. T. G. பேரன்புரூக் ஐயர் (Rev. J. T. G. Barenbruck), சங்கை இராபர்ட் ரஸ்ட் மெடோஸ் ஐயர் (Rev. Robert Rust Meadows), ஆகியோரின் பணிகளின் சாட்சிதான் இன்றைய சாட்சியாபுரமும், சிவகாசியிலுள்ள தென்னிந்திய திருச்சபையைச் சேர்ந்த தேவாலயங்களும், கல்விநிலையங்களும், சேவை இல்லங்களும் ஆகும்.

தூய மாற்கு தேவாலயத்தின் மூலைக்கல்லை சங்கை R. R. மெடோஸ் ஐயர் 1861ஆம் ஆண்டு பதித்து ஆலய கட்டுமானப் பணிகளைத் துவக்கிவைத்தார். 1864ஆம் ஆண்டு ஆலயம் கட்டிமுடிக்கப்பட்டது. சிலுவை வடிவத்தில் அமைந்தது இந்த ஆலயம். (Rev. R. R. Meadows laid the corner stone in 1861 and the church building was dedicated in the year 1864.) இந்த மாற்கு ஆலயம் 130ஆண்டுகளைக் கடந்த பொழுது, இதனை பழுதுபார்த்து புதுப்பித்து மறுமங்கலப் படைப்பு செய்து, ஆலயம் 1994 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 22 ஆம் நாள் திறக்கப்பட்டது.

தற்பொழுது இந்த ஆலயம் பழமையடைந்து போனதால், இந்த ஆலயத்தை அப்படியே வரலாற்றின் நினைவுகளுக்காக விட்டுவிட்டு, அருகிலேயே புதிய வனப்பான தேவாலயம் ஒன்று கட்டப்பட்டது. இது கடந்த 22-12-2022 அன்று மதுரை- இராமநாதபுரம் பேராயர் மகாகனம் Dr. D. ஜெயசிங் பிரின்ஸ் பிரபாகரன் அவர்களால் மங்கலப்படைப்பு செய்யப்பட்டு திறக்கப்பட்டு, இன்று சாட்சியாபுரத்தில் ஒரு கலங்கரை விளக்கமாகத் திகழ்கின்றது.

இந்த தேவாலயத்தின் அருகிலே ஒரு மிகப்பெரிய மக்கள் கூடும் சமுதாய ஜெபக்கூடம் ஒன்றும் உள்ளது. விசேஷித்த நாட்களில் கிராமங்களிலிருந்து வரும் மக்கள் கூடி ஆராதிக்கும் ஜெப மண்டபமே இது என்று எங்களுக்கு உதவியாக வந்த சபை ஊழியர் சொல்லக் கேட்டோம்.

இந்த ஆலயத்திற்கான மணிகோபுரம் 2007ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 22ஆம் நாள் (22-12-2007) CSI மதுரை இராமநாதபுரம் பேராயர் மகாகனம் Dr. A. கிறிஸ்டோபர் ஆசீர்

அவர்களால் மங்கலப்படைப்பு செய்து அர்ப்பணிக்கப்பட்டது. இந்த மணிகோபுரம் தான் புதிய ஆயத்தின் அருகே உயர்ந்து நிற்கிறதை தற்பொழுது காணமுடிகிறது.

**'சாட்சியாபுரம்' என்ற பெயருக்கான காரணம்:**



இங்கிலாந்து தேசத்தில் உள்ள தனது சொந்த ஊரான 'Witnesham '(A village in Suffolk, England) என்ற ஊரின் பெயரை அப்படியே தமிழில் மொழிபெயர்த்து 'சாட்சியாபுரம் 'என்று சங்கை மெடோஸ் ஐயர் பெயர் வைத்தார் என்றும், 1864ஆம் ஆண்டு இந்த கிறிஸ்தவக் குடியிருப்பு உருவானது என்றும், தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்தப் பகுதியில் CSI செவித்திறன் குறைபாடுடையோர் உயர்நிலைப்பள்ளி (எல்வின் நிலையம்), CSI மனவளர்ச்சி குறைவுடையோர் பள்ளி (எல்வின் நிலையம்), CSI தொடக்கப்பள்ளி, CMS நடுநிலைப்பள்ளி, CMS பெண்கள் மேனிலைப்பள்ளி மற்றும் சில அரசு நிறுவனங்களும் இந்தப் பகுதியில் செயல்பட்டுவருகின்றன.

சாட்சியாபுரம் CSI தூய பேதுரு ஆலயம் (Satchiyapuram CSI St. Peter's Church): சிவகாசி மேற்கு குருசேகரத்தின் புதிய ஆலயம் இது. 1994ஆம் ஆண்டு ஆலயமும், 1999ஆம் ஆண்டு மணிகோபுரமும் கட்டப்பட்டது.

**சங்கை ராக்லேண்ட் ஐயர் கல்லறைத் தோட்டம்:**

10-03-2025 திங்கள் மதியம் சிவகாசி CSI ராக்லேண்ட் நினைவாலயம் வந்த எங்களுக்கு திரு. சி. சாம்சன் அவர்கள் 'ஜெபவீரன் தாமஸ் கெஜற்றன் ராக்லாந்து - முனைவர் S. லலிதா செல்லப்பா, C. S. I. ராக்லாந்து ஞாபகார்த்த ஆலயம், சிவகாசி, முதற்பதிப்பு :2017. ' என்ற புத்தகத்தைக் கொடுத்தார்.

பின்னர் அவருடன் சங்கை ராக்லேண்ட் ஐயரின் கல்லறையில் அஞ்சலி செலுத்த திரு. சி. சாம்சன் அவர்களுடன் புறப்பட்டோம். இது சங்கை ராக்லேண்ட் ஐயரின் மறு அடக்கஸ்தலமாகும். ஆலயத்திற்குச் சொந்தமான ஏற்றம் இறைக்கும் கிணற்றருகே ஐயரின் கல்லறை இருக்கிறது. சுற்றிலும் அழகான மலர்த் தோட்டம். இங்கே ஐயரின் கல்லறையில் மலரஞ்சலி செலுத்தினோம்.



சிவகாசியிலே மரணமடைந்த ராக்லேண்ட் ஐயரை பனையடிப்பட்டியிலுள்ள திருத்தொண்டர்கள் கல்லறைத் தோட்டத்தில் அடக்கம் செய்ய முதலில் தீர்மானித்தார்கள். ஆனால் அடை மழைபெய்து கொண்டிருந்த காலமாதலால், பனையடிப்பட்டி அருகில் வைப்பாறு நிரம்பி ஓடியது. அதிலே வெள்ளப் பெருக்கும் ஏற்பட்டதால், அங்கு போகமுடியாத சூழ்நிலை ஏற்பட்டது. அதனால் சிவகாசியிலே ஐயர் வாழ்ந்திருந்த பங்களாவிற்கு அருகிலே ஒரு பெரிய புளியமரத்தடியில் ஐயரின் உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

காலங்கள் உருண்டோடிக் கடந்த நிலையில், கல்லறை




இருக்கும் இடம் ஒரு கல்விநிலையத்திற்கு சொந்தமான நிலைமைகளில், ஐயரின் எலும்புகள் மாவட்ட நிர்வாகத்தின் அறிவுறுத்தலின்படியும், உதவியுடனும், சிவகாசியில் ஆலயத்திற்குச் சொந்தமான ஏற்றக் கிணற்றுத் தோட்டத்தில் மறு அடக்கம் செய்யப்பட்டதாகவும், அதுவே நீங்கள் பார்க்கின்ற இந்த இடம் என்று திரு. சி. சாம்சன் சொல்லக் கேட்டோம்.

சிவகாசியின் அப்போஸ்தலன் என்றும், வட நெல்லை அப்போஸ்தலன் என்றும் அழைக்கப்பட்ட சங்கை T. G. ராக்லேண்ட் ஐயரின் வாழ்வும் பணிகளும் இன்று வரலாற்றின் ஏடுகளில் சத்தியத்தின் சாட்சியாக ஜொலிக்கிறது.



ஜா.ஜான் ஞானராஜ், திருநெல்வேலி

## சிவகாசி சபையின் ஆரம்பக்கால வரலாறு:

# மறைந்த காலத்தின் ஒளிக்கதிர்கள்

குட்டி ஜப்பான் என்று அழைக்கப்படும் சிவகாசி பட்டாசு உற்பத்தி மற்றும் தீப்பெட்டி உற்பத்தி ஆகியவற்றின் அடித்தளமாகவும் அச்சுக்கலை சார்ந்த தொழில்நுட்பத்தில் தென் இந்தியாவின் தலைமையகமாகவும் தலைசிறந்த கல்வி நிலையங்களுடன் மாநகராட்சியாக இன்று உயர்ந்து நிற்கிறது. மாவட்ட தலைமையிடமான விருதுநகரில் இருந்து தென்மேற்கே சுமார் 28 கிலோமீட்டர் தொலைவில் இந்த நகரம் காணப்படுகிறது. விருதுநகர் - தென்காசி இடையிலான தொடர்வண்டி பாதை இந்த நகரம் வழியாக செல்கிறது.

1790 இல் ஒருங்கிணைந்த திருநெல்வேலி மாவட்டம் ஆங்கிலேயர்களால் உருவாக்கப்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் நியமிக்கப்பட்ட போது ஸ்ரீவில்லிபுத்தூர் சாத்தூர் தாலுகாக்கள் உருவாக்கப்பட்டன. அவற்றில் சாத்தூர் தாலுகாவின் கீழ் இந்த நகரம் திருநெல்வேலி மாவட்டத்திற்குள் வந்தது. புதிய ராமநாதபுரம் மாவட்டம் உருவாக்கப்பட்ட போது அந்த மாவட்டத்தில் சேர்க்கப்பட்டது.

### சிவகாசியின் உருவாக்க வரலாறு: கிராமத்திலிருந்து நகரமாகி வந்த பாதை

சிவகாசி என்ற பெயருக்கு விழுமியமான ஒரு ஊர்வழிப் பின்னணி இருக்கிறது. அதன் மத்தியில் இருந்த சிவன் கோயிலின் அடையாளமே இக் கிராமத்திற்கு 'சிவகாசி' என்ற பெயரை ஏற்படுத்தியது. இது வழிபாட்டு மையமாக இருந்ததோடு, சமூக வாழ்வியல் முறைகளும் அதன் சுற்றுவட்டத்தில் கவிழ்ந்தன.

1600 க்கும் 1700 க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில், அக்கால ஒருங்கிணைந்த திருநெல்வேலி மாவட்டத்தின் தெற்குக் கிழக்குப் பகுதியில், அதாவது தற்போதைய திருச்செந்தூர், ஏரல், ஸ்ரீவைகுண்டம் மற்றும் சாத்தான்குளம் தாலுகாக்களில் இருந்து, பனைப் பொருட்களை (கருப்பட்டி, பனை ஓலைக் கைதொழில் பொருட்கள் உட்பட) சார்ந்த வணிகத்திற்காக வந்த நாடார் வணிகக் குழுக்கள், சிவகாசியை ஒரு முக்கிய இடமாகக் கண்டனர்.

இவர்கள் மாட்டு வண்டிப் பேட்டைகள் அமைத்து, இப்பகுதியில் தற்காலிகமாகத் தங்கத் தொடங்கினார்கள். பின்னர், அந்த வணிகக் குழுக்கள் பெரிதும் விரிந்தனர். சிவகாசி, விருதுநகர், திருமங்கலம், சாத்தங்குடி, அருப்புக்கோட்டை, பாலையம்பட்டி ஆகிய ஆறு முக்கிய இடங்களில் நிரந்தரமாக குடியேறினர். இதில், சிவகாசியே தலைமை ஊராக திகழ்ந்தது.

இந்த நகர்களின் உறவின்முறை அமைப்பும் தலைமைப்படியும் சிவகாசிக்கே சார்ந்திருந்தது. சிவகாசி உறவின்முறைத் தலைவர் என்பது அந்த வட்டாரத்தில் சமூக கட்டுப்பாட்டையும் தீர்வுகளையும் வகுத்த தனித்த நபராகக் கருதப்பட்டார். இது 19ஆம் நூற்றாண்டின் பின் பகுதியில் நிகழ்ந்த சிவகாசி கலவரங்கள் தொடர்பான வரலாற்றுச் சான்றுகளில் தெரியவருகிறது.

### ஊழிய அறிமுகமும் தொடக்கமும்

சிவகாசி மற்றும் அதன் சுற்றுவட்டார கிராமங்களில் கிறிஸ்தவ நற்செய்தியின் ஒளி முதன்முதலில் பரவத் தொடங்கிய காலம் 19ஆம் நூற்றாண்டின் தொடக்கக் காலமாகும். 1820 முதல் 1838 முடியக் காலகட்டத்தில், கனம். இரேனியஸ் ஐயரவர்கள் இப்பகுதியில் நற்செய்தி அறிவித்த முதன்மை ஊழியராக பதிவாகியுள்ளார். இவரது முயற்சிகள் விழிப்புணர்வை ஏற்படுத்தினாலும், அந்நேரத்தில் சபை நிலைபெற முடியவில்லை.

அதனைத் தொடர்ந்து, பாப்டிஸ்ட் மிஷன் மற்றும் பிரதரன் மிஷன் ஆகியவை இவ்வட்டாரத்தில் தனது சொந்த ஊழியங்களை நிகழ்த்தின. இவைகளின் பின் காலத்தில், கிறிஸ்தவ ஊழியத்தின் சிறப்பான முன்னேற்றத்தை உறுதிப்படுத்தும் வகையில், 'வட திருநெல்வேலி மிஷனரி ஊழியம்' எனும் பெயரில் CMS (Church Missionary Society) தனது வேலைகளை தீவிரப்படுத்தியது.

இந்த ஊழியத்தின் நோக்கம், அக்கால ஒருங்கிணைந்த திருநெல்வேலி மாவட்டத்தின் வடபகுதியில் உள்ள கிராமங்களில் நற்செய்தி ஊழியங்களை வேரூன்றச் செய்வது என்பது. இந்த இயக்கத்தின் தொடக்கத்தில், வாகைகுளம் மற்றும் சாட்சியாபுரம் (இன்றைய சிவகாசி) ஆகிய இரண்டு முக்கிய இடங்கள் தலைமையிடமாக இருந்து, அவற்றின் சுற்றுவட்டார கிராமங்களில் செயல்பட தொடங்கியது.

வாகைகுளம் வட்டாரத் தலைமையிடமாக இருந்தபோது, அங்குள்ள முக்கிய தலைமை குருவாக கனம். வீ. வேதநாயகம் ஐயரவர்கள், பல ஆண்டுகளாக அந்த இடத்திலேயே தங்கி, நேரடியாக மக்கள் மத்தியில் பணி செய்த பெருமைக்குரிய ஊழியர் ஆவார்.

சாட்சியாபுரத்தில், நற்செய்தி ஊழியத்திற்கு இடைவெளி இல்லாமல் உதவிய தருணங்களில், அங்குள்ள தலைமை பதவிகளை ஐரோப்பிய மிஷனரிகள் வகித்தனர். அதில் குறிப்பிடத்தக்கவர்கள்:

**இராக்லண்ட், ஃபென், மெடோஸ், பேரன்புரூக்**

இவர்கள் அனைவரும் தலைமை குருக்கள் என்ற வகையில் மக்களோடு இடைவெளி இல்லாமல் பணியாற்றினார்கள். இவர்களின் பின்வட்டாரத்தில், திருநெல்வேலி திருமண்டலத்தைச் சேர்ந்தவர், கலுங்குவிளையைச் சொந்த ஊராகக் கொண்ட, முன்னர் பாட்டக்கரையில் போதகராக இருந்த கனம். சாமுவேல் பவுல் ஐயரவர்கள் (1844-1900), முக்கிய தலைமை பதவியை ஏற்று, 11 மார்ச் 1900 அன்று மரணம் அடையும் வரை சாட்சியாபுரம் வட்டார தலைவராக ஊழியத்தில் ஈடுபட்டார்.

இவரது தந்தை கனம். தானியேல் பவுல் ஐயரவர்கள், முன்னேற்றமானபோதகராகதிருநெல்வேலியில்அறியப்பட்டவர். இவ்வாறு ஒரே குடும்பத்தில் இருந்து இரண்டு தலைமுறைகளும் சமர்ப்பணத்தோடும், ஆழ்ந்த விசுவாசத்தோடும் ஊழியங்களில் ஈடுபட்டனர் என்பதும், சாட்சியாபுரத்தின் வரலாற்றில் முக்கோணமான நிலையாகத் திகழ்கிறது.

### சிவகாசியின் முதல் கிறிஸ்தவர்

1849ஆம் ஆண்டு, சிவகாசியின் வரலாற்றில் ஒரு மறக்கமுடியாத சுவிசேஷக் கண்ணொளி முதன்முதலாக தென்பட்டது. அந்நூற்றாண்டின் நடுப்பகுதியில், புண்ணிய நாடார் என அறியப்பட்ட ஒரு வாலிபர், இந்த நகரத்தில் முதல் கிறிஸ்தவராக உரிய அடையாளம் பெற்றவர்.

இவர், J. T. டெய்லர் என்ற மிஷனரியின் ஊடாக ஆண்டவர் இயேசு கிறிஸ்துவைப் பற்றி முதன்முதலில் அறிந்து, கிறிஸ்தவ விசுவாசத்தில் மனமாறுதல் அடைந்தார். தமது புதுமையான விசுவாசத்தைப் பூரணமாக அறிந்து கொள்ளும் நோக்கில், பாளையங்கோட்டை செமினரியில் சேர்ந்து கிறிஸ்தவ மறைக்கல்வி பயில விரும்பினார். ஆனால் பல்வேறு காரணங்களால் அவரது அந்த விருப்பம் நிறைவேறவில்லை.

இதன் பின்னர், இவர் 'வட நெல்லை மூவர்' என அழைக்கப்படும், சிவகாசியில் தொடக்கத்தில் பணியாற்றிய மூன்று முக்கிய மிஷனரிகளின் ஊடாக மீண்டும் ஆண்டவரின் நற்செய்தியைக் கேட்டார். இந்த அறிமுகம் அவருடைய உள்ளத்தை ஆழமாக தொட்டிருந்தாலும், தம்மை வெளிப்படையாக ஒரு கிறிஸ்தவராக அறிவிக்கவும், சபை உறவின் அடிப்படையில் கிறிஸ்தவ சமூகத்துடன் இணைவதற்கும் அவர் முன் வரவில்லை.

அதனால், இவர் 'முதல் கிறிஸ்தவர்' என்ற வரலாற்று பெருமையைப் பெற்றாலும், அந்த நிலை உள்நிலை மாற்றத்தினாலேயே ஏற்பட்டதோடு, சமூகத்தின் முன் வெளிப்படையாக உறுதிமொழி கொடுக்கப்படாத ஒரு பிணைப்பாகவே இருக்கின்றது. இருப்பினும், சிவகாசி கிறிஸ்தவ வரலாற்றில், புண்ணிய நாடார் அவர்களின் வாழ்க்கை ஒரு அரிய விளக்கக் கோட்டாகவும், முகப்பு வாயிலாகவும் அமைந்துள்ளது

### சிவகாசியின் தொடக்கக் கால கிறிஸ்தவர்கள்

சரவணன் நாடார் என்பவரின் மூன்று மகன்களில், அருணகிரி, அருணாச்சலம், மற்றும் அண்ணாமலை ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாக இருந்தனர். இதில் மூத்தவர் அருணகிரி, திருப்பரங்குன்றம் திருவிழாவிற்கு சென்றபோது, அங்கு பசுமலைக் கிறிஸ்தவர்கள் விநியோகித்திருந்த 'லூக்கா சுவிசேஷம்' என்ற அச்சுப்பிரதியை பெற்றார். அந்த நற்செய்திப் பிரதியை தம் தம்பி அருணாச்சலத்திடம் கொடுத்து வாசிக்கச் சொன்னார்.

அந்த வாசிப்பு, அருணாச்சலத்தின் உள்ளத்தை மாற்றி, அவரை ஆண்டவரிடம் இட்டுச் சென்றது. தந்தையான சரவணன் நாடார் இந்த மாற்றத்தை ஆதரித்தார். ஆனால் மூத்த அண்ணன் அருணகிரி, தம் தம்பியின் விசுவாசத்தை எதிர்த்துப் துன்புறுத்தல்களை ஏற்படுத்தினார். இதற்கிடையே சரவணன் நாடார் மரணம் அடைந்தார்.

அருணாச்சலமும் அவரது நண்பர்களும் மரத்தடியில் ஜெப வாழ்க்கை மேற்கொண்டனர். இந்த நேரத்தில் இராக்லண்ட், ஃபென், மெடோஸ் ஆகிய ஐரோப்பிய மிஷனரிகள், சிவகாசியை ஒட்டி உள்ள கிராமங்களில் கூடாரம் அமைத்து நற்செய்தி பணியில் ஈடுபட்டிருந்தனர். ஆனால் சிவகாசி மக்கள் அவர்களை எதிர்த்தனர்-புழுதி வாரியும், கல் எறிந்தும் அவர்கள் செயல்களை தடுத்தனர்.

அருணாச்சலம் மற்றும் அவரது நண்பர்கள், அந்த மிஷனரிகளை நாடி, ஞானஸ்நானம் பெற விருப்பம் தெரிவித்தனர். மிஷனரிகள் அவர்களை ஆயத்தக்காரராக

ஏற்றுக்கொண்டனர். ஆனால் உடனடியாக திருமுழுக்கு பெற வேண்டும் எனும் தீவிர ஆவலால், அவர்கள் வத்திராயிருப்பு சென்று, அங்கு இருந்த பாப்டிஸ்ட் போதகரான கனம். அருளப்பர் மூலமாக கிறிஸ்தவ போதனைகளையும், 1855ஆம் ஆண்டு ஞானஸ்நானத்தையும் பெற்றனர். அருணாச்சலத்துக்கு அப்போது 'வேதபோதகம்' என்ற பெயர் அளிக்கப்பட்டது.

அவரது முயற்சியினால், சிவகாசி அம்மன் கோவில் பட்டியில், பாப்டிஸ்ட் சபையாக முதல் கிறிஸ்தவ சபை உருவானது. அதன் முதல்போதகராகவே வேதபோதகர் நியமிக்கப்பட்டார். தேவாலயம் கட்டுவதற்காக, வேதபோதகர் தமக்கு சொந்தமான நிலத்தையும், செலவையும் அளித்தார். ஆலயம் பிரதிஷ்டைக்காக மரியான் உபதேசகர் வந்து சிறந்த கீர்த்தனைகள் பாடினர்.

இவரே சிவகாசியில் தம்மை வெளிப்படையாக கிறிஸ்தவராக அடையாளப்படுத்திய முதல் நபர். அவருடைய பேரனே நாசரேத்தில் மருத்துவப்பணியில் சிறந்து விளங்கிய டாக்டர் வேதபோதகம் ஆவார்.

வேதபோதகரைத் தொடர்ந்து, காளிமுத்து என்பவர் சாட்சியாபுரத்தில் மெடோஸ் ஐயரவர்களின் ஆங்கிலப் பள்ளியில் கல்வி கற்கும்போது இயேசுவை ஏற்றுக்கொண்டு 'வேதமுத்து' எனும் பெயரில் திருமுழுக்கு பெற்றார். மேற்படிக்காக பாளையங்கோட்டைக்கு சென்று, மெட்ரிக்குலேஷன் தேர்ச்சி பெற்று, கனம். தாமஸ் ஸ்பிராட் ஐயரவரிடத்தில் பணியாற்றினார். பின்னர் கோவிலூத்தை தலைமையிடமாகக் கொண்டு குருகராக பணியாற்றினார்.

வேதமுத்து, நாடார் சமூகத்தைச் சேர்ந்த முதல் குருவான கனம். தே. ஞானமுத்து ஐயரவர்களின் மகள் ஜீவரத்தினத்தை திருமணம் செய்தார். இந்த திருமணத்திற்கு, சிவகாசியின் முதலாளிகளில் ஒருவர் சண்முக நாடார் ஆதரவளித்ததோடு, திருமண நிகழ்வில் பாளையங்கோட்டையில் பங்கேற்றது அந்த நாளில் சிறப்பாக பேசப்பட்டது.

இந்த இருவருக்குப் பின்பு, P. சுவிசேஷமுத்து உபாத்தியாயர், P. P. வெள்ளையப்பர், பாலப்பர், வேதநாடார், ஞானகிரி, மின்னம்மாள், பால் வண்ணர் ஞானபாக்கியம் அம்மாள், அன்னம்மாள் மாணிக்கம் ஆகியோரும் கிறிஸ்தவ விசுவாசத்தில் நுழைந்து திருமுழுக்கு பெற்றனர்.

இவர்களே சிவகாசியின் தொடக்கக் கால கிறிஸ்தவர்கள், இவர்களாலேயே அந்தச் சபையின் வளர்ச்சிக்கு ஒரு உறுதியான அடித்தளம் அமைந்தது.

### சிவகாசி மத்திய தேவாலயம் – ஒரு வரலாற்றுப் பாரம்பரியம்

சிவகாசியின் மையப்பகுதியில் அமைந்துள்ள தேவாலயம், அந்தப் பகுதியில் ஆன்மிக பாரம்பரியத்தையும், சமுதாய சேவையையும் பிரதிபலிக்கும் முக்கியமான இடமாக விளங்குகிறது. இந்த தேவாலயம் முதன்முதலில் 1860ஆம் ஆண்டு வேத போதகர் சிவகாசி அம்மன் கோயில் பட்டியில் கட்டப்பட்டது.

பின்னர், 1875ஆம் ஆண்டு, இந்த தேவாலயம் சிவகாசி நகரின் மத்தியில் நவீனமாக பிரதிஷ்டை செய்யப்பட்டது. இவ்வேலைக்கு அந்நாளில் தனது சொந்த நிலத்தைக் கொடுத்து, முழுமையான அர்ப்பணிப்புடன் தேவாலயத்தின் கட்டட வேலைகளை முன்னெடுத்தவர் திரு. P. P. வெள்ளையப்பர் ஆவர். ஜவுளி கடை தெருவில் உள்ள தனது வீட்டிற்கு மேற்கே உள்ள நிலத்தை இக்கட்டடத்திற்காக வழங்கியதுடன், அந்தக் காலத்தில் இது ஒரு முக்கிய ஆன்மிக மையமாக உருவெடுக்கவும் அவர் பாடுபட்டார்.

### சிவகாசியின் கல்வி வளர்ச்சியில் சபையாரின் முக்கிய பங்களிப்பு

சிவகாசி நகரின் கல்வி முன்னேற்றத்தில் கிறிஸ்தவ சபையாரின் பங்களிப்பு மிகவும் முக்கியமானதாகும். 19ஆம் நூற்றாண்டின் கடைசிப்பகுதியில், கனம். மெடோஸ் ஐயர் அவர்கள் காலத்தில், அருகிலுள்ள சாட்சியாபுரத்தில் உயர்தர பாடசாலை இயங்கிக் கொண்டிருந்தது. ஆனால், அப்பாடசாலையில் சென்று கல்வி பயில்வதை சிவகாசி மக்கள் விரும்பாத நிலை காணப்பட்டது.

இந்த நிலையை மாற்ற, கிறிஸ்தவ சபையைச் சார்ந்த, சமூகத்தில் செல்வாக்கு மிக்க, சமய வேறுபாடின்றி அனைவருடன் நன்கு பழகும் இயல்புடைய கல்வியாளர் K. C. A. ஞானகிரி அவர்கள் 1885ஆம் ஆண்டு சிவகாசி விக்டோரியா மத்திய பாடசாலையை நிறுவினார். ஆரம்பத்தில் IIIrd Form (தற்போதைய எட்டாம் வகுப்பு) வரை மட்டுமே கல்வி அளித்த இப்பள்ளி, 1915ஆம் ஆண்டில் மாற்றுத்திறனுடைய உயர்நிலைப் பள்ளியாக, SSLC - Matriculation தரத்துக்குத் உயர்த்தப்பட்டது.

பள்ளியின் ஆரம்பகால ஆசிரியர்கள் அனைவரும் திருநெல்வேலி மாவட்டத்தின் தென் பகுதிகளைச் சேர்ந்த சிறந்த கிறிஸ்தவ கல்வியாளர்கள் ஆவர். நிர்வாகியாக நீண்ட காலம் பணியாற்றிய K. C. A. ஞானகிரி அவர்கள், பள்ளிக்காக சிறந்த கட்டிடங்களைத் திரட்டிய நன்கொடைகளின் மூலம் கட்டினார்கள். இந்த முயற்சிகளில், சிவகாசியின் முக்கிய பணக்காரர்களின் ஆதரவையும் பெற்றிருந்தார்.

மிகுந்த ஒழுங்கு, நேர்மை மற்றும் நல்லிணக்க உணர்வோடு செயல்பட்ட ஞானகிரி அவர்கள், தனது பதவியை பின் காலத்தில் தமது இந்து நண்பர்களுக்குப் பெருமையோடு ஒப்படைத்தார். இதன் தொடர்ச்சியாக 1920ஆம் ஆண்டில், பள்ளியின் பெயர் சிவகாசி இந்து நாடார்கள் விக்டோரியா உயர்நிலைப்பள்ளி என மாற்றப்பட்டது. ஆனால், இப்பெயர் மாற்றம் பலரிடையே, குறிப்பாக சிவகாசி முன்னோடிகள் மத்தியில் வருத்தத்தைக் ஏற்படுத்தியது.

சிவகாசி மண்ணின் மைந்தரான கனம். பால் மாணிக்கம் ஐயர் அவர்கள், தமது எழுத்துக்களில் இந்த வருத்தத்தை நேர்மையாக பதிவு செய்துள்ளார். இது, அக்கால கல்விப் புரட்சியில் சபையாரின் பங்களிப்பு எவ்வளவு ஆழமானது என்பதையும், சமூக ஒற்றுமையின் முக்கியத்துவத்தையும் நமக்கு நினைவூட்டுகிறது.

### சிவகாசி இரகசிய கிறிஸ்தவ பெண்கள் மற்றும் உறவின் முறை

### கட்டுப்பாடு – 1920களின் சமூகவியல் சிந்தனை

1920களில், சிவகாசி நகரில் சமூகத்தின் உள் அடுக்குகளில் ஒரு முக்கியமான மாற்றம் நுழைந்தது. இது, அந்த காலகட்டத்தில் கிறிஸ்தவ சபைத் தாய்மார்கள் (missionary women) மேற்கொண்ட ஊழியங்களால் ஏற்பட்டது. இந்த ஊழியத்தின் தாக்கமாக, சிவகாசி நகரப் பெண்கள் சிலர் இரகசியமாக கிறிஸ்தவத்தை ஏற்றுக்கொண்டு ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை வழிபட ஆரம்பித்தனர்.

அந்த காலத்தில், பெண் வாழ்க்கை உறவின் முறை மற்றும் குடும்ப கட்டமைப்புகளால் நன்கு கட்டுப்பட்ட ஒரு சூழ்நிலையில் இருந்தது. கிறிஸ்தவத்தை ஏற்ற பெண்கள் கோவில்களுக்கு செல்வதை நிறுத்தி, சபைகளில் சந்திப்பதும், ஜெபிப்பதும் ஆகியவற்றை முற்றிலும் இரகசியமாக செய்தனர். இதன் விளைவாக, கோவில்களில் பெண்கள் கூட்டம் கணிசமாக குறைவடையத் தொடங்கியது.

இதை கவனித்த உறவின் முறை தலைவர்கள், 'பெண்கள் கோவில்களுக்கு வராதபட்சத்தில், அந்தக் குடும்பங்கள் சிவகாசி உறவின் முறை பொதுமகாமையில் இருந்து நீக்கப்படுவார்கள்' என கடுமையான உத்தரவைத் தந்தனர். இந்த ஆணையின் காரணமாக, குடும்பத் தலைவர்கள் தங்கள் குடும்ப பெண்களுக்கு கோவில்களுக்கு வர வேண்டுமென கெடுமையாக அழுத்தம் கொடுக்க ஆரம்பித்தனர்.

இந்த சமூக அழுத்தத்தின் மத்தியில், கிறிஸ்தவமாக மாறிய பெண்கள் உறுதியுடன் நிற்க, ஊக்கத்துடன் ஜெபித்து வந்தனர். அவர்கள் நம்பிக்கையை சோதிக்கும் இந்தக் காலத்தில், சாமான்யமாகவே சபை வழிபாடுகள் இரகசியமாக நடைபெற்றன.

இந்நேரத்தில், உறவின் முறை தலைவர் ஒருவர், இந்த கட்டுப்பாட்டை அமல்படுத்த முனைந்தபோது, தனிப்பட்ட துயர அனுபவம் ஒன்று அவருக்கு நேர்ந்தது. இதனால் அந்த திட்டம் நிறைவேறாமலே ஒதுக்கப்பட்டது. இந்தச் சம்பவம், அந்தச் சமூகத்தின் மனப்பான்மை மாற்றத்திற்கு ஒரு முக்கிய கட்டமாகவும், மதச் சுதந்திரத்தின் சிறிய ஒரு வெற்றியாகவும் பார்க்கப்படுகிறது.

இந்த உண்மைச் சம்பவத்தை நேரில் கண்ட கனம். தர்மராஜ் ஐயர் அவர்கள், தமது நூலில் உணர்ச்சிப்பூர்வமாக பதிவு செய்திருக்கிறார். இது ஒரு காலகட்டத்தில் பெண்கள் சமுதாயத்தில் மத சுதந்திரம் எவ்வாறு கட்டுப்படுத்தப்பட்டு, எதிர்ப்புகளுக்கு மத்தியில் அவர்கள் எப்படி தங்கள் நம்பிக்கையை நிலைநிறுத்தினார்கள் என்பதற்கான நுண்ணறிவான வரலாற்றுப் பதிவாகும்.

சிவகாசி கலவரம் (1899) மற்றும் திருச்சபையின் நிலைப்பாடு: மதம், சமூகமற்ற சமமற்ற தன்மையும், மாற்றமுடிக்காத உறுதிப்படையும்

### மத உரிமையும் சமூக போராட்டமும்:

1899ஆம் ஆண்டு, சிவகாசி நகரம், சாதி, மதம் மற்றும் கலாச்சார அடையாளங்களை மையமாகக் கொண்ட ஒரு தீவிரமான கலவரத்திற்கு சாட்சியாக மாறியது. பெரும்பான்மையாக இருந்த நாடார் சமூகத்தினர், சிவன் கோயிலுக்குள் நுழைந்து வழிபட உரிமை கோரினர். ஆனால் இந்த கோரிக்கையை, திரு. வெள்ளையப்பத் தேவர் தலைமையிலான கோயில் நிர்வாகம், பிற சமூக கலாச்சாரங்களுக்கான வேறுபாட்டை முன்வைத்து நிராகரித்தது.

### சமூக மாற்றங்கள்:

இந்த மோதலுக்கு முன்னதாகவே நாடார்கள் தங்கள் தனித்துவமான சமூக கலாச்சார வழிமுறைகளில் மாற்றம் செய்து, உயர் சாதி இந்துக்களிடமிருந்து சீரமைப்பு நோக்கத்தில் விலகியிருந்தனர். அதாவது:

1. அடக்கம் செய்யும் மரண சடங்கு முறை கைவிடப்பட்டு, எரிப்பு முறையை ஏற்றனர்.
2. திருமணச் சடங்குகளில் அனந்தரம் செய்தல் போன்ற பழமையான சடங்குகள் நீக்கப்பட்டன.
3. பட்டம் கட்டுதல் போன்ற மரணச் சடங்குகளும் கைவிடப்பட்டது.

இந்த மாற்றங்கள் நாடார் சமூகத்தில் புதுமையான விழிப்புணர்வையும், மேலோங்கி வாழ விரும்பும் முயற்சியையும் பிரதிபலிக்கின்றன.

### கலவரத்தின் வெடிப்பு:

சிவன் கோயிலுக்குள் 1899 ஜூன் மாதம் நாடார்கள் நுழைந்து வழிபட்டதன் பின்னர், எதிர்பார்த்தவாறு மறவர் சமூகத்தினர் தங்கள் எதிர்ப்பை காட்டினர். 1899 ஜூன் 6ஆம் தேதி, 5000-க்கும் மேற்பட்ட மறவர்கள், தென்காசி வரையிலான கிராமங்களிலிருந்து கூடி வந்து, நாடார் வீடுகள் மீது தாக்குதல் நடத்தினர். இதில்:

886 நாடார் வீடுகள் சேதமடைந்தன. இரு தரப்பில் 21 பேர் உயிரிழந்தனர். நாடார்கள் 1500 பேர் திரண்டு வலிமையாக எதிர்த்ததால் மறவர்கள் பின்னோக்கிச் செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. பின்வாங்கிய மறவர்கள், வழியில் நாடார் கிராமங்களை தாக்கியும் கொள்ளையடித்தும் சென்றனர். இந்த நிகழ்வுதான் வரலாற்றில் 'சாணார் கொள்ளை' என அழைக்கப்படுகிறது

### திருச்சபையின் நிலைப்பாடும் சமூகச் சிக்கலும்:

இந்த பதற்றமான சூழ்நிலையில், சிவகாசி திருச்சபை முக்கியமான இடத்தை வகித்தது. அப்போது: • கனம். S. டேவிட் (செல்வநாயகம் டேவிட் ஐயர்) – சிவகாசி குரு • கனம். தா. சாமுவேல் பவுல் ஐயர் – சாட்சியாபுரம் குரு இவர்கள் இருவரும் நாடார் சமூகத்தைச் சேர்ந்தவர்கள். கலவரக்காரர்களால் சபை மக்களும் பாதிக்கப்பட்டனர். அதனால், சபை சார்பாக ஆங்கிலேய அரசிடம் தகவல் கொடுக்கப்பட்டது. அதன் விளைவாக ராணுவம் அனுப்பப்பட்டது.

கனம். டேவிட் அவர்கள், மருத்துவராகவும்,

சமய வேறுபாடின்றி மக்கள் உடல்நலனுக்காகப் பணியாற்றியவராகவும், இந்தக் காலகட்டத்தில் முக்கிய பங்கு வகித்தார். அவரின் சமாதான முயற்சிகளும், சமூகத்தில் மத நல்லிணக்கத்தை உருவாக்க உதவின.

### முடிவுகள் மற்றும் பிற விளைவுகள்:

கலவரத்துக்கு பின், 1899 ஜீலை மாதம் கர்னல் ஜான் மன்றோ தலைமையிலான ராணுவம் களத்தில் இறங்கி கலவரத்தை அடக்கியது. கலவரத்தின் தாக்கம் நீடித்ததால், Permanent Armed Reserve Force ஒன்று சிவகாசியில் நிலைநிறுத்தப்பட்டது. இது இன்றும் செயல்படுகிறது. இந்த நிகழ்வுகள் நாடார் சமூகத்தில் அர்ப்பணிப்பும், எதிர்ப்பும், உரிமை வேண்டலும் என்பதை வெளிப்படுத்தும் வரலாற்றுப் பொக்கிஷமாக இருக்கிறது.

### சிவகாசியில் இருந்து எழும்பிய தொடக்க கால குருமார்களும் ஊழியங்களும்

சிவகாசி மண்ணில் எழுந்த முதற்கால கிறிஸ்தவ ஊழியர்கள், அந்த ஊர் மக்கள் மத்தியில் மட்டுமல்லாது, அண்டை கிராமங்களிலும் நற்செய்தி பணியைச் செய்தவர்களாக எண்ணித் திகழ்கிறார்கள். குறிப்பாக, 1890களுக்குப் பிற்பட்ட காலத்தில் ஏற்பட்ட சிவகாசி கலவரம் காரணமாக, அந்நகரில் வாழ்ந்த சில கிறிஸ்தவர்கள் மேலச்சுரண்டை மற்றும் கீழச்சுரண்டை பகுதிகளுக்குச் சென்றடைந்தனர். ஆனால், அவர்களை மறக்காமல், ஆவிக்குரிய தேவை மற்றும் ஊக்கத்திற்காக சுரண்டைக்கு அடிக்கடி வருகை தந்தனர் சிவகாசியில் இருந்து எழுந்த ஆவிக்குரிய குருமார்கள்.

இந்தத் தூய பணியினைப் பற்றிய நினைவுகள் இன்று வரை மக்களிடையே உயிரோடு நிலைத்திருக்கின்றன. அவர்களது வருகைகள் வெறும் சந்திப்பு அல்ல; நற்செய்தியின் வாசனை, ஆன்மா வளர்ச்சி, உறுதி ஆகிய அனைத்திற்கும் அடித்தளமாக அமைந்தன.

### சிவகாசி மண்ணில் இருந்து எழுந்த புனித பணியாளர்கள்:

கனம். M. துரைச்சாமி, கனம். M. S. இரத்தினம், கனம். M. D. இராஜமணி, கனம். பால் மாணிக்கம் இவர்கள் அனைவரும் இறைப்பணிக்கென அர்ப்பணிக்கப்பட்டவர்கள். அவர்களுள் முதலில் எழும்பியவரும் முன்னோடியும் கனம். M. துரைச்சாமி ஐயர் அவர்கள் ஆவார். அவருடைய ஊழியம் வெறும் சொற்பொழிவாக மட்டும் இல்லாமல், ஆழமான ஆன்மீக அக்கறையும், தொடர்ச்சியான பராமரிப்பும் கொண்டிருந்தது.

வயோதிபத்திற்குப் பிறகும் அவருடைய உள்ளத்தின் அக்கறை குறையவில்லை. தாம் நேரில் செல்ல இயலாத நிலையிலும், சுரண்டை பகுதிகளில் நற்செய்தியை ஏற்று கிறிஸ்தவ வாழ்க்கையில் நிலைத்திருக்கும் நபர்கள் பற்றிக் கடிதம்வழியாக தொடர்ந்து ஆராய்ந்து வந்தார். 'அவர்கள் உறுதியாக இருக்கிறார்களா?' என்ற கவலையும் அன்பும் அந்தக் கடிதங்களில் அடங்கியிருப்பதை அவரது தலைமுறைகள் இன்னமும் கண்ணீரோடு நினைவுகூறுகிறார்கள்.

தமது பெற்றோருக்கு கனம். துரைச்சாமி ஐயர் எழுதிய கடிதங்கள் இன்று வரை பாதுகாக்கப்பட்டுள்ளன என்ற செய்தி, நம் கிறிஸ்தவ சமூகத்திற்கே பெரும் சந்தோசமும் பெருமையும் தரக்கூடியதாகும். இது அவருடைய ஊழியப் பற்றையும், ஆவிக்குரிய தியாக உழைப்பையும் சாட்சியமாகப் பேசுகிறது.

### இராக்லண்ட் நினைவு தேவாலயத்தின் வரலாறு மற்றும் வளர்ச்சி

### தொடக்க கால தேவையாலயம்:

சிவகாசி திருச்சபையின் ஆரம்ப கால தேவாலயம் திரு. P. P. வெள்ளையப்பரால் கட்டப்பட்டது. ஆனால் தேவையைக் கருத்தில் கொண்டு புதிய இடத்தில் பெரிய தேவாலயம் கட்டத் திட்டமிடப்பட்டது.

### இராக்லண்ட் நினைவாக புதிய தேவாலயம்:

மிஷன் ஆஸ்பத்திரி இருந்த இடத்தில் புதிய தேவாலயம் கட்டும் திட்டம் உருவானது. வட திருநெல்வேலியில் மறைந்த கனம் ராக்லண்ட் ஐயரர் நினைவாக இந்த தேவாலயம் உருவாக்கப்பட்டது.

### பிரதிஷ்டை நாள்:

1925 டிசம்பர் 29 - பேராயர் மகாகனம் நார்மன் டப்ஸ் அவர்கள் பிரதிஷ்டை செய்தார்.

### புதிய கோபுரம்:

1938 செப்டம்பர் 26 - புதிய கோபுரம் பிரதிஷ்டை செய்யப்பட்டது (பேராயர் பெக்கன் ஹாம் உவால்ஷ்).

### பொன்விழா (1975):

50வது ஆண்டு விழாவாகக் கொண்டாடப்பட்டது. இதை நினைவாக பால்கனி கட்டப்பட்டது.

### தற்போதைய திருச்சபை வளர்ச்சி:

இப்போது சிவகாசியில் 5 முக்கிய குருசேகரங்கள் உள்ளன:

சாட்சியாபுரம், இராக்லண்ட் தேவாலய திருச்சபை, சிவகாசி மேற்கு, சிவகாசி கிழக்கு,திருத்தங்கல்

### வட்டகை மன்ற தலைவர்கள்:

1. சாட்சியாபுரம் மேற்கு Rev. Dr. J. ஜான் கமலேசன்
1. சாட்சியாபுரம் கிழக்கு Rev. Dr. சாம் கிதியோன்

### முடிவுரை:

இவை அனைத்தும் இராக்லண்ட் உள்ளிட்ட ஐரோப்பிய மிஷனரிகள் மற்றும் அவர்களின் வழி வந்த இந்திய குருமார்களின் அர்ப்பணிப்பு ஊழியத்தால் நிகழ்ந்தது என்பது உண்மை. இது ஒரு அழைப்பு, நமது வரலாற்று பாரம்பரியத்தை நினைவில் கொண்டு, அடுத்த தலைமுறைக்கு கிறிஸ்தவ ஊழியத்தின் உண்மையான அர்த்தம், தொண்டு மற்றும் அன்பு பெருக்க வேண்டும்.




# Yearly Subscription



**600**

christianhistoricalsociety.in

Apply Now

## Monthly Magazine for church history

Return Requested:

To

Tamil Printed Book- For Private Cirulation Only


**CHRISTAVA VARALATRU SUVADUGAL**
# 2.2.3(4)North Street,
Bungalow Surandai-627859.
Tenkasi District
Tamil Nadu
Ph: 04633 290401
Mo: **91767 80001**



Owned & Published By CHRISTIAN HISTORICAL SOCIETY, Tamil Eduction- For Private Cirulation Only
Editor|G.MUTHAIAH SELVAKUMAR| at 2.2.3(4)North Street, Bungalow Surandai-627859. Tenkasi District Ph: 04633 290401